www.padippakam.com

# தகவற்சுருள்

DEVIENS CE QUE TU ES

SOFT

தமிழர் கல்வி
ஆலோசனைச் சேவை - பிரான்ஸ்

SOFT info

SERVICE D'ORIENTATION
FRANCO - TAMOUL

இலவச வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com


# AUTO ECOLE க்கு

## தமிழ்மொழி மூலமான CODE வகுப்புகள்

## சனி, ஞாயிறு கிழமைகளில் மட்டும்

CODE வகுப்புகள் தமிழ் மொழி விளக்கத்துடன் பிரெஞ்சு மொழியிலான பரீட்சையில் சித்தியடையக்கூடிய முறையில் கற்பிக்கப்படுகின்றது.

பி.ப. 2.30 மணி - மாலை 4.00 மணி
மாலை 4.00 மணி - மாலை 5.30 மணி

3 மாத காலத்திலேயே CODE பரீட்சையில் சித்தி பெறக்கூடிய இவ்வகுப்பில் சேர்ந்து பயனடையுங்கள்

வாகனம் ஓட்டத் தெரிந்தும் CODE இல் சித்தி பெறமுடியவில்லையே என்ற கவலை வேண்டாம்

இதோ உங்களுக்காக

# A U T O   S O F T

CENTRE PAROSIEL DE NOTRE DAME DE BERCY
11, RUE DE LA NATIVITE
(1, RUE DE BERCY + 5, RUE DE DIJON சந்திக்கருகில்)
75012 PARIS

Mo: Bercy - Dugommier - Daumesnil

**Tel: 49 57 03 98**

www.padippakam.com

தகவற்சுருள்
இல: 1

தமிழர் கல்வி
ஆலோசனைச்
சேவை - பிரான்ஸ்

இலவசவெளியீடு

SERVICE D'ORIENTATION
FRANCO-TAMOUL
2, rue du Quatre-Septembre
78800 HOUILLES ☎ 49.57.03.98

கணணிப் பதிப்பு
பாரதி பதிப்பகம்

# உள்ளே.........

நமது நோக்கு
பக்கம் - 4

தமிழ் அகதிகளை நெருக்கும்
புதிய கடும் திட்டங்கள்
பக்கம் - 6

புதியஅரசாங்கத்தில் வெளிநாட்டவரின்
நிலையும் பிரஜா உரிமை பற்றிய
புதிய சட்ட மாற்றங்களும்
பக்கம் - 12

ஐரோப்பிய சமூகமும்
அகதிகளின் எதிர்காலமும்
பக்கம் - 16

ஒரு தொடர்பும் துண்டிப்பும்
பக்கம் - 23

தொழிலாளர் சிக்கல்கள்
பக்கம் - 26

[illegible] அடிப்படையிலான
[illegible] அனுமதிப்பத்திரம்
பக்கம் - 30

விஞ்ஞானமும் மனிதனும்
பக்கம் - 37

படிப்பகம்

www.padippakam.com

# நமது நோக்கு

சிதறுண்ட சிலையின் பாகங்கள் சிலகாலம் சிதறுண்டேயிருக்கலாம். துண்டங்களையெடுத்துத் துடைத்து மெருகூட்டிப் பாதுகாப்பது கடமை. சிற்பியொருநாள் நிச்சயம் வருவான். அப்போது அவன் துண்டங்களையெல்லாம் கொண்டு மீண்டும் சிலையை உருவாக்குவான்.

ஆங்காங்கு விரவி அல்லலுறும் தமிழர்களுக்கென்று உருவாகும் ஒவ்வொரு கல்விநிலையமும் அதனதன் வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. பாரிஸாகஇருந்தாலென்ன, பனங்கூடல் நிழலாகஇருந்தாலென்ன பாடசாலையென்று ஒன்று அங்கு தமிழர்களுக்காக உருவாக்கப்பட்டால் அங்கு ஆகக் குறைந்தது ஒரு தமிழனாவது ஏதாவது சில விடயங்களை அறிந்து தனது அறிவைப் பெருக்கிக் கொள்ளமுடியுமானால், அப்பாடசாலையின் அர்த்தம் பூர்த்தி செய்யப்படுகின்றது.

தமிழன் சார்பாகத் தமிழன் யார் என்ற கேள்வி அர்த்தமற்றது. உலகம் சார்பாக தமிழன் யார் என்ற கேள்விதான் நியாயமானது. தனது ஸ்தம்பித நிலையை வைத்து உலகமானது தனது முற்போக்கு நிலையை அளக்க முயல்வதை யார்தான் விருப்புவார்கள். தமிழன் என்ற இனப்பரிமாணத்தின் ஒவ்வொரு தனிமனிதனும் தன்னைப் பூர்த்தி செய்ய முயற்சிக்கும்போது மட்டுமே இனப்பரிமாணத்தின் முன்னோக்கிய நகர்வு உருவாகிறது.

அறிவுப்பசி கொண்டலைகிறது இன்றைய உலகம். அறிவை மட்டுமே சிறந்த ஆயுதமாக ஏற்றுக்கொண்டுள்ளது இன்றைய உலகம். இவ்வாயுதம் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படவேண்டிய ஒன்று. தத்துவம் தொடங்கி தொழில்நுட்பம் வரை ஒவ்வொன்றும் தரப்படவேண்டும். அனைத்தையும் உள்வாங்கவோர் அகன்ற புனல்வேண்டும். அந்தப் புனல்தான் மொழி. தாய் மொழியை மட்டும் வைத்துக்கொண்டு அனைத்தையும் அறிந்துவிடமுடியாது. குறிப்பாக அந்நியநாட்டின் தாழ்வாரங்களுக்குள் தற்காலிகமாக ஒதுங்கிநிற்கும் எமக்கு, இத்தாழ்வாரங்களுக்குள் இருக்கும் பூரான்களிடமிருந்து தப்பிக்கொள்வதற்கும், தன்னைச் சமூகப்போக்கில் இணைத்து முழுமைப்படுத்திக் கொள்ளவும் அவர்களின் மொழியும் வேண்டும்

அண்மைக் காலங்களில் பிரான்ஸில் வந்து குடியேறிய எம்மவரின் பிரெஞ்சு மொழி வறுமை நியாயமானது. ஆனால் தவிர்க்க முடியாததல்ல.

"பிரெஞ்சு தமிழ் கல்வி ஆலோசனைச் சேவை" என்று எம்மால் ஆரம்பிக்கப்பட்ட கல்விநிலையத்தின் இலக்குகளில் அடிப்படையானது தமிழர்களுக்குப் பிரெஞ்சு மொழியைத் தமிழ் மூலம் கற்பிப்பதேயாகும். இருப்பினும், இவ்விலக்கையும் தாண்டி அடுத்தடுத்த படிகளிலும் பயனுள்ள பாய்ச்சல்களை ஏற்படுத்த வேண்டும் என்ற எமது அவா கம்பியூட்டர் வகுப்புக்களாகவும்,



படிப்பகம்

www.padippakam.com

விரைவில் வாகன ஓட்டுநர்களுக்கான வீதியொழுங்கு வகுப்புக்களாகவும் பரிணமித்துள்ளது.

அமைதியாக இருப்பினும் உறுதியான திட்டங்களுடன் எமது கல்விச் சேவையை முன்னெடுக்க எண்ணியுள்ள எமக்கு உங்களது உறுதுணை அவசியமானதாகும். ஆரம்பமாகி இரண்டு மாதங்களிலேயே நூற்றுக் மேற்பட்ட மாணவர்கள் பயனடையும் நிலை உருவாகியுள்ளது பெருமையளிப் பதொன்றாகும்.

மொழி ஒரு தடைக்கல்லல்ல. அது ஒரு படிக்கல் என்பதை உணர்ந்து கொள்ளும் ஒவ்வொருவருக்கும் எமது கல்விச்சேவை பயன்பட முடியாமல் போகாது. பல திறமைகளைத் தன்னகத்தே கொண்டும், மொழிப் பிரச்சி னையால் திக்குமுக்காடுபவர்களின் பிரச்சினைகளை எமது பாடசாலை தீர்க்க முயற்சிக்கும் என்பதில் யாரும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. உயர்கல்வியைத் தொடரவேண்டும் என்ற பெருவிருப்பிருந்தும் அதை செயல்படுத்தத் தெரியாது தடுமாறும் இளைஞர் யுவதிகட்கு “நீ நீயாகு” என்ற எமது இலச்சினை வாக்குக்கேற்ற வகையில் ஆலோசனையும் ஆதரவும் நல்கி வழிகாட்டுவது எமது நோக்கங்களில் ஒன்று மட்டுமல்ல, கடமையும் கூட.

தற்போது நடைபெறும் வகுப்புக்களுடன் பாரிய தொழில் நுட்பக் கல்வித்திட் டங்களை பிரான்ஸ்வாழ் தமிழர்களின் நன்மை கருதி எமது கல்விநிலையம் நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளது.
பிறதேச வாழ்க்கையில் நமக்குப் பயன்படக்கூடிய செய்திகளை அவ்வவ் போது நமது ”தவற் சுருளி”னூடாக வெளியிடுவதும், சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை பெறக்கூடிய கருத்தரங்குகளை ஒழுங்கமைப்பதும் எமது நோக்கங்களின் சில அங்மாகும்.

இவ்வகையிலேயே எமது கல்வி நிலையத்தின் இம்முதலாவது ”தகவற் சுருள்” புறப்படுகின்றது. இச்சுருள் அனைவருக்கும் சென்றடையவேண்டும் என்ற எண்ணத்தில் இலவசமாக வெளியிடப்படுகின்றது. இதற்கான செலவுகளின் ஒரு பகுதியை ஈடுசெய்ய விளம்பரங்கள் தந்துதவிய தமிழ் வர்த்தகர்களுக்கு இத்தகவற்சுருள் சார்பாகவும், இதனால் பயனடையும் தமிழர்கள் சார்பாகவும் நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

> ஆனால் இந்த நூற்றாண்டின் இறுதியில், அல்லது அடுத்த நூற்றாண் டின் முதற்பத்திற்குள் நடக்கப்போவது வேறு. அன்று ஒரு தவளைகூட கிணற்றுக்குள் இருக்கமுடியாது. இது எனக்கு வெகு நிச்சயமாகத் தெரிகின்றது. அன்று பிடிவாதமாக வெளியே வராதவை உயிர் மூச் சற்று அழிந்துபோகும். இது இயற்கையின் நிர்தாட்சண்யமான விதி.
>
> - சுந்தர ராமசாமி



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் அகதிகளை நெருக்கும் புதிய கடும் திட்டங்கள்

பல்வேறு நாட்டு அரசாங்கங்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், செய்தித் தொடர்புச் சாதனங்கள், அபிவிருத்தி நிறுவனங்கள் என்பன மட்டுமல்லாமல், பொதுமக்கள்கூட "அகதிகள்" எனக் கணிக்கப்படுபவர்கள் பற்றிய விடயத்தை தனிப்பட்ட ஒரு பிரச்சினையாக அணுகி, அதனைப் பல்வேறுபட்ட வழிகளில் கையாள இன்று முனைகின்றனர். ஆகவே, தமிழ் அகதிகளும் அவர்களோடு சேர்ந்து உழைக்கும் சமூக அமைப்புகளும், பாதுகாப்பான புகலிடம் என அகதிகள் கருதும் நாடுகளில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய அந்தஸ்து, வாழ்க்கை ஆகியவற்றை மாற்றக் கூடிய் நிகழ்வுகளைக் கூர்மையாக அவதானித்து, அப்படி ஏன் நடைபெறுகின்றன என்பதை நன்கு அறிந்திருப்பது அவசியமாகும். சட்டத்தின் கீழ், அகதிகளையும் வேறுவழியில் குடிவருவோரையும் இனம் பிரித்துக் காட்ட முயலும் அரசுகளின் புதிய போக்கை நாம் முக்கியமாக மனதில் கொள்ள வேண்டும். எமக்குச் சஞ்சலத்தைத் தரும் வேறு பல காரணங்களையும் நாம் கவனித்தல் வேண்டும்.

அகதி என்பவர் அவரது இனம், மதம், குடியுரிமை, சமூகப் பிரிவு அல்லது அவர் கொண்டிருக்கும் அரசியல் அபிப்பிராயம் என்ற காரணங்களால், தமது சொந்த நாட்டில் இடைவிடாத ஆய்க்கினை அநியாயங்களுக்கு (Persecution) ஆளாகக் கூடிய ஆபத்து நிலையில் இருப்பதுடன், அந்நாட்டின் பாதுகாப்பை நாடமுடியாத நிலையிலும் இருக்கின்ற தனிப்பட்ட நபர் என வரைவிலக்கணம் வகுக்கும். 1951 ஆம் ஆண்டின் ஐ. நா. அகதிகள் ஒப்பந்த மரபின் (1951 UN Convention) கீழ், அகதிகளைத் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்வோம் என மேற்கு நாடுகள் கூறுகின்றன. இவ்வாறான குறுகிய வரையறைக்குள் அடங்காதோரை, "வசதியான வாழ்வினைத் தேடித் தமது நாட்டை விட்டு வந்தவராக" தாம் கருதுவதாகவும் அவை மேலும் நாட்டின் அரசியலைப் பொறுத்து, அரசியல்வாதிகள் அகதிகளுக்கு, "ஏமாற்றுக்காரர்", "வேற்றுநாட்டன்", "அழையா விருந்தாளி", "பொய்யர்", "பொருளியல் அகதிகள்" என்ற அடைமொழிகளையும் வழங்குகின்றனர்.

இப்படியான விவாதங்கள், மேலும் நுட்பமாக்கப்பட்டு "வெளிப்படையாகவே ஆதாரமற்ற அரசியல் தஞ்ச விண்ணப்பங்கள்" எனத் தலைப்பிடப்பட்ட ஐரோப்பிய சமூகத்தின் நகல் தீர்மானம் ஒன்றிலும் வெளியிட்டுள்ளதை காணக்கூடியதாக இருக்கின்றது. "ஐரோப்பிய சமூக அங்கத்துவ நாடுகளைவிட குறைந்த அளவிலான பாதுகாப்பு, பொருளியல் வாய்ப்பு அல்லது தனிநபர் சுதந்திரம் உள்ள நாட்டவர் என்ற காரணங்களுக்காக, வேறு நாடுகளிலிருந்து வரும் தனிநபர்கள், ஐ. நா. அகதிகள் ஒப்பந்த மரபின் கீழ் பாதுகாப்புப் பெறமுடியாது" என மேற்படி நகல் தீர்மானம் மேலும் கூறுகிறது. சொந்த நாட்டிலேயே தங்கியிருந்து, தமது நாட்டின் அதிகாரிகளிடம் பாதுகாப்பினை, நிவாரணத்தையோ பெறுவதற்கான எல்லா வழி வகைளையும் தேடியும், அவ்வழி ஏனைய பிராந்திய மனித உரிமை ஒப்பந்தங்களே கைகொடாத கட்டத்தை அடையும் வரை அவர்கள் அங்கு



படிப்பகம்

www.padippakam.com

தங்க முயற்சிக்க வேண்டும்", என்ற வாசகமும் அங்கு உள்ளது. "வேற்று நாட்டில் அடைக்கலம் கோருவதைத்தவிர ஒருவருக்கு வேறுவழி இல்லை என்ற நிலையில் மட்டுமே அகதி விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்" என்றும் மேலும் கூறப்பட்டுள்ளது. விண்ணப்பமானது "வெளிப்படையாகவே ஆதாரமற்றதாக இருக்கின்றவிடத்து, அங்கத்துவ நாடானது ஒரு மாதத்துக்குள் ஆரம்பத் தீர்வினை எடுத்து அத்தீர்ப்புக்கெதிரான மீளாய்வு நடவடிக்கை முறை ஏதேனும் இருப்பின் அதனையும் ஒரு மாதத்துக்குள் செய்து முடிக்கும் நோக்குடன் துரிதமாகவும் மேலதிகமானதுமான நடவடிக்கை முறைகளைச் செயற்படுத்தலாம்" எனவும் இந்நகல் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலைப்பாடுகள் அகதிகளையும் அகதிகள் நலன்பேணும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோரையும் நிச்சயமா சஞ்சலத்தில் ஆழ்த்துவனவாக உள்ளன.

இப்புதிய அணுகு முறையில் இரு முக்கிய அம்சங்கள் அடங்கியிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

1. அரசாங்கங்கள் அகதிகளைத் தனிநபர்களாகவே கணிக்கும்;
2. தனிப்பட்ட முறையில் பிரத்தியோகமான ஆபத்தில் தாம் உள்ளார் என்பதை நிரூபிக்கும்படி அகதிகளை அதிகாரிகள் கேட்பர்.

குடிவருவோருக்கும் அகதிகளுக்குமிடையே அரசுகள் காட்டுகின்ற வேறுபாடு யதார்த்த உலகில் செல்லுபடியற்றது மட்டுமல்ல; நேர்மையற்றதும்கூட என்று அகதிகளின் உரிமைக்காகவும் அவர்களின் நலன்களைப் பேணுவதிலும் ஈடுபட்டுள்ளோர் கருதுகிறார்கள். அரசியல் அகதிகளையும் புகலிடம் கோருவோரையும் பாதிக்கும் சட்டவாக்கங்கள் நீதி சமத்துவ அடிப்படையிலான கோட்பாடுகளுக்கு அமைய இருக்க வேண்டும் என்பது பலரின் நிலைப்பாடு. ஆனால் அரசாங்கம் நீதியையோ நற் பண்புகளையோ (Moral) கவனத்திற் கொள்வதற்காகத் தெரியவில்லை. இதிலிருந்து அரசாங்கங்களின் போதுவான எண்ணம் எதுவென்பது நன்கு புலப்படுகிறது. புகலிடம் கோருவோர் தமது நாட்டுக்கு ஆபத்தானவர்கள் அல்லது தமது நாட்டுக்கு நெருடலாக இருப்பவர்கள் எனக் கருதப்படுகின்றனர். அகதிகளை பாராமுகமாக நோக்கும் போக்கிற்கு அவர்களை குற்றவாளிகளாகக் குறி சுடும் போக்கிற்கும் இடையே அகதிக் கொள்கை விருத்தி ஊசலாடுகிறது. அகதிகள் புலம் பெயர்வு என்ற பிரச்சினையை சீர் தூக்கிப் பார்க்கும் அதேவேளை வறிய நாடுகளில் இருந்துவரும் தொழிலாளர்களுக்குப் பதிலான மாற்று ஏற்பாடுகளை எடுக்கவேண்டிய அவசியத்தை பல தொழில் வள நாடுகள் கடந்த சில ஆண்டுகளாக வற்புறுத்தி வருகின்றன. இரண்டு தாபனங்கள் இதற்கான வழிமுறைகளை அமைக்க முடுக்கி விடப்பட்டன:

1. சேகன் குழு (The Schergan Group) பிரான்சு, ஜேர்மனி, பெல்ஜியம், ஒல்லாந்து, லக்சம்பேர்க் என்ற நாடுகளும் அவதானிகளாக அவுஸ்திரேலியா, சுவிற்சலாந்து நாட்டுப் பிரதிநிதிகளும் இக்குழுவில் பங்குபற்றின. ஒரு சீரான கொள்கை வகுத்தல் என்ற போர்வையில் கடும்போக்கான குடிவரவுச்சட்டங்களையும் புகலிடச் சட்டங்களையும் கொண்டு வரவே இக்குழு அமைக்கப்பட்டது.
2. ட்ரெவி குழு (The Trevi Gruop) ஐரோப்பிய சமூக குடிவரவு அமைச்சர்களைக் கொண்ட இக்குழு "புகலிட விதிமுறைகளைத் துர்ப்பிரயோகம் செய்தல்" பற்றி ஆலோசிக்கக் கூறப்பட்டதாகக் கூறி ஆரம்பிக்கப்பட்டு, போதைவஸ்து கடத்தல், பயங்கரவாதம், சட்டவிரோத உள்வரவு என்ற விடயங்களையும் உள்ள


படிப்பகம்

www.padippakam.com

டக்கியே, அகதிகள் விடயத்தை ஆராய வேண்டும் என்ற நோக்குள்ளதாக அமைந்தது. இது அகதிகள் சம்பந்தப் பட்ட பிரச்சினையை ஒரு கீழ்த்தரமான நிலைக்குத் தள்ளும் நோக்குடையதாக அமைவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

முக்கியமாக ஐரோப்பிய சமூக நாடுகளில் மட்டுப்படுத்தல் என்ற தந்திரோபாயம் முடுக்கி விட்டிருப்பதை அண்மையில் காணக்கூடியதாக உள்ளது. இதன் நோக்கம் வளர்முக நாடுகளில் இருந்து வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு வருபவர்களைத் தடுக்கும் நோக்கமாகவே அமைந்துள்ளது. முடிவில் ஐரோப்பா வெள்ளையருக்கே என்ற நிலைக்கு இது வழிகோலும். ஏற்கனவே அங்குள்ள வளர்முக நாடுகளைச் சேர்ந்தோர், இதனால் "ஐரோப்பியரல்லாதோர்" ஆகவும், இரண்டாந்தரப் பிரசையாகவும் ஆக்கப்படுவர். அகதிகள், குடியேறியோர், கறுப்பினத்தவர் ஆகியோருக்கு எதிரான பொது அபிப்பிராயம் கொண்ட புதிய ஐரோப்பாவாக இது மாற்றமெடுப்பதை நாம் சம்வங்களின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

இத்தகைய ஐரோப்பாவில் அகதி அந்தஸ்து பற்றிய 1951 ஐ. நா. ஒப்பந்த மரபின் மனிதாயக் கொள்கைகள் அரசுகளால் உதாசீனப்படுத்தப்படுகின்றன. மேற்கூறிய விடயங்களில் எம்மை பெரிதும் பாதிப்பவை எவையெனில் தீர்மானங்கள் எடுக்கப்படும் முறைகளும், அவற்றினை நடைமுறைப்படுத்தலும், அகதிகள் நடத்தப்படும் முறைகளுமாகும். அகதிகள், புலம்பெயர்ந்தோர் என்போரில் பெரும்பான்மையினர் வளர்முக நாடுகளிலே தான் வாழ்கின்றார்கள்; வளர்ச்சியடைந்த நாடுகளில் அல்ல. எண்பத்தைந்து சதவீதத்திற்கு மேற்பட்ட அகதிகள் வளர்முக நாடுகளில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஐந்து சதவீதத்திற்குக் குறைவான அகதிகளே ஐரோப்பாவில் வாழ்கின்றனர். பொஸ்னிய நாட்டுப் பிரச்சினை, ஐரோப்பியப் புலப்பெயர்வு என்பனவற்றைப் பார்க்கின்றபோதும் அகதிகள் இடம்பெயர்வது வறிய நாட்டு மக்களிடையேதான். தமிழரைப் பொறுத்த வரையில் இதுதான் உண்மை. பத்து லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் அகதிகள் இலங்கைக்குள்ளேதான் புலம்பெயர்ந்துபோய் வாழ்கிறார்கள். இரண்டு லட்சத்துப் பத்தாயிரம் இலங்கைத் தமிழர் இந்தியாவிற்கு புலம்பெயர்ந்து போயுள்ளார்கள். மிகச்சிறிய தொகையினரே மேற்கை நாடி வந்துள்ளார்கள். இந்தியாவின் கெடுபிடியினாலேதான் தமிழர் இப்போது மேலை நாடுகளை நாடுகிறார்கள். இலங்கையில் பாதுகாப்பற்ற நிலை என்று அறிந்தும் இந்தியா தம்மை வலுக்கட்டாயமாக இலங்கைக்கு அனுப்பிவிடும் என்பதும் இன்னொரு காரணம்.

சமகாலப்போர், சிவில் மோதல்கள் என்பன காரணமாக கடந்த ஆண்டில் உலகடங்கிலும் அகதிகளகச் சென்ற, அல்லது புலம்பெயர்ந்து சென்ற மக்களுட் பெரும்பாலோர் ஆப்கானிஸ்த்தான் நாட்டினராக (86 லட்சம்) தென்னாபிரிக்கர்களாக (35 லட்சம்) கேடிஸ்தான்களாக (20 லட்சம்) பிலிப்பினோக்காரராக (20 லட்சம்) அங்கோலா நாட்டினராக (12 லட்சம்) இலங்கையர்களாக (11 லட்சம்) சூடான் மக்களாக (11 லட்சம்) உள்ளனர் என்பது மனதிற் கொள்ளப்படவேண்டிய ஒன்று. மேற்படி நாடுகளில் போராட்ட நிலை இன்றும் தொடர்கிறது. மேற்படி நாடுகளில் நடைபெறும் போர்கள் மேற்கு நாட்டு உதவியுடன் பதவியிலிருக்கும் சர்வாதிகாரங்களும், மேற்கு நாட்டின் தந்திரோபாய உதவிகளுமே மேற்படி போர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்றன. இந்தப் புள்ளி விபரங்கள், எமக்கு புலம்பெயரிகள், அகதிகள் பற்றிய அடிப்படை விடயங்கள் சிலவற்றை உறு



படிப்பகம்

www.padippakam.com

திப்படுத்துகின்றன.

போருக்கும் பூசலுக்குமான காரணங்களும் மேற்கு நாடுகளாகவே இருக்கும்போது, "அகதிகள்" பொருளாதார புலம் பெயரிகள்" என்போர்க்கிடையே வேறுபாடு காண முயல்வது செல்லுபடியற்ற ஒன்றாக எமக்குத் தோன்றுகிறது. அஃதன்றி, பிரத்தியேகமான தனிப்பட்ட ஆபத்துக்குள்ளாகி இருக்கும் ஒருவருக்கே அகதி நிலை அளிக்கப்படும் என்பதும் நீதியானதாகத் தெரியவில்லை. உலகளாவி நிற்கும் சர்வதேச நிவாரண முகவர் நிலையங்கள், அபிவிருத்தி முகவர் நிலையங்கள், மனித உரிமைகள் தாபனங்கள் என்பனவும் ஒன்றை மட்டும் திரும்பித் திருப்பி உறுதிப்படுத்துகின்றன; அதாவது சைரே, அங்கோலா, மொசாம்பிக், இலங்கை ஆகிய நாடுகளை விட்டு ஓடி வருவோர் தமக்கோ தமது குடும்பத்தினருக்கோ உயிராபத்து விளையும் என்று அஞ்சுவதற்கு காரணம் இருப்பதாலேயே அவ்வாறு நாட்டை விட்டு கிளம்புகின்றார்கள் என்று உறுதி செய்கின்றன. அரசாங்கங்கள் தமது சர்வேதச கட்டுப்பாடுகளை உதறித் தள்ளிவிட்டு தமக்கு சாதகமான திடீர் மாற்றங்கள் சிலவற்றைக் கொண்டு வந்துள்ளனர் என்பதுதான் உண்மை. இந்த மாற்றங்களின் விளைவாக தஞ்சம் கோருவோரின் பெரும்பாலோர் அரசியல் அகதிகளாகவோ, அல்லது அரசாங்கங்கள் விபரிப்பதுபோல் பொருளியல் புலம் பெயர்வோர்களாகவோ வரமுடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளனர். தஞ்சம் கோருவோரில் பெரும்பாலோர் தனிப்பட்ட ஆய்க்கினை அநியாயங்களுக்கு உட்படுத்தப்படாமையால் அரசாங்கங்களின் பார்வையில் அத்தகையோர் அரசியல் அகதிகள் அல்லர். இவ்வாறே அவர்கள் பொருளியற் புலம்பெயரிகளுமல்லாமல்; ஏனென்றால் தம் நாட்டில் தங்கியிருப்பின் தமக்கு ஆபத்து உண்டு என்று எண்ணுவதற்கான நல்ல காரணங்கள் அவர்களுக்குண்டு. இவ்வாறான அரசாங்கம் செய்துள்ள மாற்றம் நொய்தான (Vulnerable) நிலையில் உள்ளவர்களை இந்த இரண்டு வகுதிகளுக்கும் இடையிலான ஒரு நிலைக்குத் தள்ளியுள்ளது. இப்படிப்பட்ட இடைவகுதி ஒன்று நடைமுறையில் உள்ளது என்பது அரசாங்கங்களுக்கும் அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஆணையாளருக்கும் தெரியும். எனவே அவர்கள் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவேண்டும். எனவே கொண்டிருக்கும் கடும் போக்கில் சில பலவிதமான நெகிழ்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் இந்தப் பிரச்சினையை கையாளத் தலைப்பட்டுள்ளன. அரசாங்கங்கள் ஐக்கியராச்சியத்தைப் பொறுத்த வரையில் "தங்கலுக்கான பிரத்தியோக அனுமதி" (Exceptional Leave to Remain) என்ற கோட்பாட்டின் பயன்பாட்டை சற்று நீட்டுவதன் மூலம் மேற்படி நெகிழ்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அண்மைக்காலப் புள்ளி விபரங்களைப் பார்த்தால், தஞ்சம் கோரியோரிற் பெரும்பாலோர் அகதிகளாக தகுதி பெறுவதற்குப் பதிலாக தங்கலுக்கான பிரத்தியேக அனுமதி வழங்கப்பட்டோராக உள்ளனர். அரசாங்கத்தின் மேற்படி போக்கினாலேதான் அகதிகளுக்கான ஐ. நா. உடன்படிக்கையின் கீழ் முழு அகதி நிலை பெறக்கூடிய தமிழர் பலர் தங்கலுக்கான பிரத்தியேக அனுமதி மட்டுமே பெற்றுள்ளனர். அதிகாரிகளின் கூற்றுப்படி, தஞ்சம் கோரிய அவர்களின் எழுத்திலான கோரிக்கை தனிப்பட்ட அவர்களை ஆபத்துக்குள்ளாக்கும் சூழ்நிலை உண்டென்பதை நிரூபிக்கத் தவறியுள்ளது.

புதிய தஞ்சச் சட்டத்தின் கீழ், தஞ்சக் கோரிக்கைகள் மீதான தீர்மானிப்பதைத் துரிதப்படுத்துவதன் மூலம் தங்கலுக்கான பிரத்தியேக எண்ணிக்கையையும் குறைக்க முடியும் என்று ஐக்கிய இராச்சிய அதிகாரிகள் கூறுகின்றார்கள். இந்


படிப்பகம்

www.padippakam.com

தப் போக்கு அகதிகளுக்கும், அகதிகள் நலம் பேணும் நிலையங்களுக்கும் கவலை தரும் விடயமாக உள்ளது. புதிய தஞ்சச் சட்டத்தின்கீழ் தங்கலுக்கான பிரத்தியேக அனுமதி வழங்கப்படுவோரின் எண்ணிக்கை குறையுமாயின், அரசாங்கம் நீதியை கீழே விழுத்தி நிர்வாக ஒழுங்கை மேலிடத்தில் வைத்துவிட்டது என்று நாம் முடிவு செய்யலாம்; இதற்கு மாறாக தங் கலுக்கான பிரத்தியேக அனுமதி வழங்கப் படுவோரின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படாவிடின் அகதிகளுக்கு அவர்களின் சொந்த நாட்டில் இருக்கும் உண்மையான ஆபத்தை அரசாங்க அலுவலர் உணர்ந்து விட்டார்கள் என்று கொள்ளலாம்.

ஆக, எதிர்காலம் எப்படி இருக்கும்? இருக்கின்ற நிலையைப் பார்த்தால் பிரச் சினையின் உக்கிரம் தணியும் போல் தெரியவில்லை. ஆய்க்கினை அநியாயங் களிலிருந்து தப்பியோடி வருவோருக்கு நீதியும் நியாயமும் பெற்றுத் தரவேண்டு மானால் இன்னும் பல யுத்தங்கள் செய் தாக வேண்டும். சில அரசாங்கங்களின் இன்றைய நடைமுறைகள் அநீதியான வையாகவும், நியாயமற்றவையாகவும் எதேச்சையானவையாகவும் உள்ளன. அவை, சில அம்சங்களில் அரசாங்கங் களுக்கென அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஆணையாளர் வகுத்த வழிகாட்டு நெறி களை மீறுவனவாக உள்ளன. அகதிகளும் அவர்களது சமூகங்களும் இவற்றைப்பற்றி அறிந்திருத்தலும் சேர்ந்துழைத்தலும் அவசியமாகும். அப்போதுதான் அகதிக ளின் அந்தஸ்து பற்றிய 1951 ஆம் ஆண் டின் ஐ. நா. உடன்படிக்கையின் கீழான கட்டுப்பாடுகளை அரசாங்கங்கள் மதித் தொழுகுவதை உறுதிப்படுத்த முடியும். அகதிகள் தமது நாடுகளுக்குச் சேமமாக திரும்பிச் செல்லக்கூடிய நிலைமை வரும் வரை தஞ்சம் புகுந்த நாட்டில் இருப்பதற் கும் சர்வதேச பாதுகாப்புப் பெறுவதற்கும் உரித்துடையவர்கள். இதைத் தமது கடப் பாடாக பல அரசாங்கங்கள் ஏற்றுள்ளன. ஆகவே அக்கடப்பாட்டிலிருந்து விலக முடியாது. தமது கட்டுப்பாடுகளை அர சாங்கங்கள் அங்கீகரித்து அதற்கிணங்க அகதிகளுக்கு அனுகூலமான கொள்கை களை வகுக்கும் வண்ணம் ஊக்குவதற்கு பொதுமக்களின் அபிப்பிராய பலம் முக்கி யமானதாகும்.

குடிவரவு, தஞ்சம் என்பன சம்பந்மான கொள்கையானது, அது தேசிய மட்டத் தில் எடுக்கப்பட்டாலும் சரி, சர்வதேச மட்டத்தில் எடுக்கப்பட்டாலும்சரி நியாயத் திற்கு உட்பபட்டதாக இருக்கவேண்டும் என்று தமிழ் தகவல் நடுவம் வற்புறுத்தி வந்துள்ளது. அதாவது அத்தகைய கொள்கை விசயம் விளங்கியோரை அடக் கிய விவாதங்கள் மூலமும் கலந்துரை யாடல் மூலமும் எடுக்கப்படவேணும் என் பதோடு, அரசாங்கங்களின் சட்ட, அர சியல், வரலாற்று, நன்னெறிசார் மனிதா பிமான கட்டுப்பாடுகளையும் சமுதாய நிலை, சமூகச் சூழல் ஆகிய பிரச்சி னைகளை கருத்திற்கொண்டும் எடுக்கப் படல் வேண்டும் என்பதே தகவல் நடு வத்தின் நிலைப்பாடு.

இடம்பெயர்க்கப்பட்ட எல்லோரும் தத்த மது இருப்பிடங்களுக்குத் திரும்பிப் போகவேண்டும் என்பதே அகதிகளினதும் அவர்களோடு தொழிற்படுவோரதும் விருப் பம். அகதிகள் எனப்படுவோர் எந்த அர சியல் சிக்கலுக்கு இரையாகியுள்ளார் களோ அந்த அரசியல் சிக்கலை வெளிப் படையாக ஒப்புக்கொண்டு அதற்கான தீர்வை காண்பது, நொய்தான நிலையில் உள்ளோருக்கு பாதுகாப்புத்தர மறுக்கின்ற ஐக்கிய இராச்சியத்தினதும் ஏனைய வளர்ச்சி பெற்ற நாடுகளினதும் கடமை என்பதை அந்த நாடுகளுக்குச் சுட்டிக் காட்டுவது எங்களது கடமையாகும். கட் டுப்பாடு விதிக்கும் தண்டனை முறைக்குப் பின்னே பதுங்கி நிற்பதால் பிரச்சினை


படிப்பகம்

www.padippakam.com

முடியாது என்பதை நாம் எடுத்துக்கூற வேண்டும். தஞ்சம் கோருவோருக்கான மேற்கு நாடுகள் எவ்வாறு விவரித்தாலும் சரி, மூன்றாம் உலக நாடுகளில் வாழும் மக்கள் சேமமாகவும், வறுமை குறைந்த நிலையிலும், கூடிய சுதந்திரத்திலும் வாழக்கூடிய சூழ்நிலை ஏற்படும்வரை இடம்பெயர்க்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டுதான் இருக்கும். தொகுத்துப் பார்க்கின்ற போது, கைத்தொழிலால் மேம்பட்ட நாடுகள் இதைத்தான் உணரவேண்டும்.

## பாரிஸில் தமிழ்மூலம் பிரெஞ்சு மொழி பயிலக்கூடிய நிறுவனங்களின் முகவரிகள்

### பாரிஸ் தமிழர் கல்வி நிலையம் (P. T. E. C)

5, RUE LACHARIERF, 75011 PARIS
165, RUE DD CHARONNE, 75011 PARIS
Mo: Charonne ou Alexandre Dumas

### பிரெஞ்சு - தமிழ் கல்வி நிலையம் (C. E. F. T)

81, RUE DE LA PLAINE - 75010 PARIS
TEL: 47 56 11 65
Mo: Maraichers ou Avron

### பிரெஞ்சு - தமிழ் வகுப்புகள்

41, RUE DIDOT, 75014 PARIS
Tel: 42 57 23 56
Mo: Pernety

### தமிழர் கல்வி ஆலோசனைச் சேவை (S. O. F. T)

CENTRE PAROISIEL DE NOTRE DAME DE BERCY
11, RUE DE LA NATIVITIE, 75012 PARIS
Mo: Bercy - Dogommier - Daumesnil


படிப்பகம்

www.padippakam.com

# புதிய அரசாங்கத்தில் வெளிநாட்டவரின் நிலையும் பிரஜா உரிமை பற்றிய புதிய சட்டமாற்றங்களும்

பிரான்சின் 5வது குடியரசின் கீழ் இறுதியாக நடைபெற்ற பொதுத்தொ்தலில் வலதுசாரிக் கட்சிகளின் கூட்டான R. P. R -U. D. F 84 வீதமான அங்கத்தவர்களைப் பாராளுமன்றத்தில் கைப்பற்றியது. இவ் வெற்றியானது, வலதுசாரிக்கட்சியின் புதிய சட்டத்திற்குச் கிடைத்ததிலும் பார்க்க, சோஷலிசக் கட்சியின் கடந்த கால ஆட்சி முறையின் மீது கொண்ட வெறுப்பினால் ஏற்பட்ட விளைவேயெனலாம். பெரும்பான்மை வாக்கு அடிப்படையில் தேர்தல்கள் நடைபெற்றதன் காரணமாக, சில கட்சிகள் ஏராளமான (விகிதாசார அடிப்படையில்) வாக்குகளைப் பெற்றும் ஒருவித அங்கத்தவரையும் பெறமுடியவில்லை.

தேசிய முன்னணி (Front National) என்ற தீவிரவாத வலதுசாரிக் கட்சியானது 12. 8 வீத வாக்குகளைப் பெற்றும் ஒருவித அங்கத்துவத்தையும் பெறமுடியவில்லை. இக் கட்சி தன்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் தாங்கள் பதவிக்கு வந்தால் வெளிநாட்வரைத் திருப்பி அனுப்புவோமென்றும், சகல துறைகளிலும் பிரெஞ்சுக்காரருக்கே முன்னுரிமை அளிப்போமென்றும் கூறியது.

வேலையில்லாத் திண்டாட்டம், உள்நாட்டுப் பாதுகாப்பு, அரிசியல் மட்டத்திலான ஊழல்கள், வெளிநாட்டவரின் வருகைய திகரிப்பு என்ற முக்கிய விடயங்களில் கடந்த அரசாங்கமானது அக்கறை காட்டவில்லையென்று தற்போது பதவியைக் கைப்பற்றியுள்ள அரசாங்கத்தின் இடைவிடாத குற்றச்சாட்டுகளும் சோஷலிசக் கட்சியின் வீழ்ச்சிக்கு காரணமாகியது.

புதிய பிரதமர் எதுவார் பலடியுர் (Esouard BALLARDUR) கடந்த ஏப்பிரல் எட்டாம் திகதி தனது பொருளாதார அரசியல் திட்டங்களை விளக்கி ஆற்றிய உரையானது பின்வரும் விடயங்களையும் கொண்டிருந்தது.

- வெளிநாட்டவர்களின் வருகையைக் கட்டுப்படுத்துவது.
- சட்டத்திற்கு முரணாக வாழும் வெளிநாட்டவர்களை நாடுகடத்துவது.
- பொலிஸ் பகுதியை நவீனப்படுத்துவது (புதிய அதிகாரங்களுடன்)
- பிரஜா உரிமை பெறுவது பற்றிய விதிமுறைகளை மாற்றியமைப்பது.
- தொழில் வாய்ப்பைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளைப் பெருக்குவது.

பிரான்சில் சிலகாலம் வாழ்ந்து, பின்னர் நீதிமன்றம் வெளியேறும்படி உத்தரவிட்ட பின்னரும், தொடர்ந்து இங்கு வாழ்பவர்களைப் பிடித்து நாடுகடத்துவது பற்றிய சட்டங்களில் மாற்றம் செய்வதும் பொலிஸ் பகுதிக்குப் புதிய அதிகாரங்களை வழங்குவதன் மூலம் நாடுகடத்தல் விடயங்களை இலகுவாக்குவதும் முக்கியமான திட்டங்களில் ஒன்றாகும்.

பிரெஞ்சுப் பிரஜா உரிமை பெறும் முறையும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதுவரையும் நடைமுறையில் இருந்த சட்டவிதிகளின்படி பிரான்சில் பிறக்கும் எந்தவொரு குழந்தையும் தனது 18வது வயதிற்குப் பின்னர் சுயமாகவே பிரெஞ்சுப் பிரஜாவுரிமையை பெறும் வாய்ப்பு இருந்து வந்தது. ஆனால் புதிதாக செய்யப்பட்ட பிரஜாவுரிமை பெறுதல் சம்பந்தமான சட்

www.padippakam.com

டவிதி மாற்றங்கள் இவற்றிலெல்லாம் பலத்த மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. யூன் 1987ல் இருந்தே இம்மாற்றத்திற்கான ஆய்வுகள் நடைபெறவாரம்பித்தன. மார்சொ லோங் (Marceau LONG) என்பவரின் தலைமையிலான பிராஜாவுரிமை பற்றிய ஒரு ஆய்வுக்கமிசன் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. பல நீதி நிபுணர்கள், அரச அலுவலர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தத்துவ வாதிகள், மதவாதிகள் போன்றோர் இக்கமிசனில் பங்குகொண்டனர். முதன் முறையாக இக்கமிசனானது இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடிய ஒருவரைவிலக்கணத்தைதேசிய உரிமை அல்லது பிரஜா உரிமை என்ற சொல்லுக்கு வழங்கியது. "பிரஜாவுரிமை என்பது அரசை அமைக்கும் மக்கள் கூட்டத்தின் உறுப்பினர் என்ற தகமையை வழங்குகின்ற, அவ்வாறு அமைக்கப்படும் அரசிற்கும் தனிமனிதனுக்குள் இடையிலேயுள்ள சட்டவியல் உறவாகும்" (LA NATIONALITE EST LE LIEN JURIDIQUE ENTRE L'ETAT ET L'INDIVIDU QUI LUI DONNE LA QUALITE DE MEMBRE DE LA POPULATION CONSTITUTIVE DE CET ETAT).

பிரஜா உரிமை கொண்ட ஒருவரின் முக்கிய கடமைகளில் ஒன்றாக "தேசிய இராணுவச் சேவை" கருதப்படுகின்றது. தேசியப் பிரஜை ஒருவர்க்குப் பின்வரும் பிரத்தியேக உரிமைகளும் உண்டு.

- வாக்களித்தலும், தேர்தல்களில் பங்குகொள்ளலும்.
- அனைத்து அரசு அலுவலகங்களிலும் தொழில் புரியும் உரிமை.
- தேசிய எல்லைகளுக்கு வெளியே எக்காரணங்கொண்டும் விருப்பத்திற்கு மாறாக அனுப்பப்படாதிருக்கும் உரிமை.
- இராஜ தந்திரப் பாதுகாப்பு (Protection diplomatique)

பல சிக்கலான பகுதிகளை ஆய்வு செய்த மார்சே தலைமையிலான கமிசனானது, பிரஜா உரிமை வழங்கல் பற்றிய அரசியல் போக்கானது மாற்றப்பட்டு, அவ்வாறான பிரஜா உரிமை பெறுபவர்கள் பிரெஞ்சு சமூகத்துடன் கலந்து வாழப்பழகக்கூடிய வகையிலான புதிய அரசியல் போக்குகள் கடைப்பிடிக்கப்பட் வேண்டுமென்றும் ஆலோசனையளித்தது. குறிப்பாக பிரான்சில் பிறக்கும் அந்நியர்களின் குழந்தை தனது விருப்பத்தைத் தெரிவித்த பின்னரே அதற்குப் பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டும் என்றும் கூறியது. மேலும் பிரெஞ்சுப் பிரஜைகளை திருமணம் செய்வதன் மூலம் பிரெஞ்சுப் பிரஜாவுரிமை பெறுவதானது பல தவறுகளுக்கு வழி சமைக்கிறது என்றும் அறிவுறுத்தியது. இதன் பிரகாரம் பிரஜாவுரிமை பெறுதல் சம்பந்தமான விதிகள் மாற்றியமைக்கப்பட்டன.

புதிய சட்ட விதிகளின்படி எந்தவொரு வெளிநாட்டரின் பிள்ளையாயினும், அப்பிள்ளை பிரான்சில் பிறந்துள்ள பட்சத்தில் பிரெஞ்சுப் பிரஜா உரிமையை விரும்பும் பட்சத்திலும் அதற்கான விருப்பத்தின் பேரில் விண்ணப்பிக்க வேண்டும். முன்னர் போன்று இப்புரிமை சுயமாக அனுமதிக்கப்பட்டவொன்றல்ல. இவ்விண்ணப்பமானது 16 வயதுக்கும் 21 வயதுக்குமிடையில் செய்யப்படல் வேண்டும். இவ்வகையில், பிரான்சில் பிறந்திருப்பினும், விரும்பாத பட்சத்தில் பிரெஞ்சுப்பிரஜாவுரிமை வழங்கப்படமாட்டாது. இவ்வடிப்படையில் 16 வயதுக்கும் 21 வயதிற்கும் இடைப்பட்ட காலத்தில் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்கும் ஒருவர் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தாலோ அவருக்கு பிரஜாவுரிமை மறுக்கப்படலாம். கொலை, போதைவஸ்து கடத்தல் போன்ற கிரிமினல் குற்றங்களைப் புரிந்தால் நாட்டைவிட்டே வெளியேற்றப்படலாம்.


படிப்பகம்

www.padippakam.com

# பிரஜாவுரிமை பற்றிய சில முக்கிய விதிமுறைகள்

| தற்போது | முன்னர் |
|---|---|
| தாய் தந்தை இருவரும் பிரெஞ்சுப் பிரஜைகளெனில்: இரத்த உரித்துக் காரணமாக குழந்தை பிரெஞ்சுப் பிரஜை. பெற்றோரில் ஒருவர் பிரெஞ்சுப் பிரஜையெனில்: பிரான்சில் பிறந்தால் பிள்ளை பிரெஞ்சுப் பிரஜை. | பிரான்சில் பிறந்தால் பெற்றோரில் ஒருவரோ அன்றி இருவரோ பிரஞ்சுப் பிரஜையெனினும் பிள்ளை பிரெஞ்சுப் பிரஜை. (மாற்றமில்லை) |
| பெற்றோர் இருவரும் வெளிநாட்டவர்களெனில்: பிள்ளை 18 வயதிற்குப் பின் சுயமாகவே பிரஞ்சுப் பிரஜையல்ல. இப்பிள்ளை 16 வயதிற்கும் 21 வயதிற்கும் இடையில் "சுய விருப்பின் பேரிலான விண்ணப்பம்" ஒன்றின் மூலம் பிரஜாவுரிமை கோரவேண்டும். இதற்கு பெற்றாரின் அனுமதி பெறவேண்டியதில்லை. | இரு வெளிநாட்டவருக்குப் பிறந்த பிள்ளை தனது 18வது வயதில் ஐந்து வருடங்கள் பிரான்சில் வாழ்ந்திருந்தால் சுயமாகவே பிரெஞ்சுப் பிரஜையாகின்றது. இறுதி வருடத்தின்போது இப்பிள்ளை பிரஜாவுரிமையை மறுக்கலாம். பிரான்சில் பிறந்த தங்களது குழந்தைக்கு 16 வயதிற்கு முன்னரே பெற்றார்கள் பிரஜாவுரிமை கோரலாம். 16 வயதிற்கும் 21 வயதிற்கும் இடையில் பிள்ளையே இந் நடவடிக்கையைச் செய்யலாம். |
| பிரான்சில் பிறந்த பிள்ளையானது நீதித் துறை சம்பந்தப்பட்ட பிரச்சனைகளில் ஈடுபடுமெனில் பிரான்சில் பிரஜாவுரிமை பெறும் உரிமையை இழக்கும். பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடல், அரசின் உறுதிப்பாட்டைக் குலைத்தல், ஆறுமாதச் சிறை, போதைவஸ்துக் கடத்தல், கொலைக் குற்றங்கள் பிரஜா உரிமை பெறும் உரிமையை இழக்க வைக்கும். | 17 வயதின் போது காணப்படும் சமூக இணக்கமின்மை (DEFAULT D'ASSIMIL-ATION) காரணமாக பிரஜாவுரிமை மறுக்கப்படலாம். |
| அல்ஜீரியா சுதந்திரமடையமுன் பிறந்த அல்ஜீரிய நாட்டவரின் பிள்ளையானது பிரான்சில் பிறந்தால், பெற்றோரில் யாராவது ஒருவர் ஐந்துவருடகாலமாக பிரான்சில் வசித்திருந்தால், அப்பிள்ளை பிரெஞ்சுப் பிரஜை. | |



படிப்பகம்

www.padippakam.com

| | |
|---|---|
| ஒரு பிரஞ்சுப் பெண்ணையோ அல்லது பிரெஞ்சு ஆணையோ திருமணம் செய்யும் அந்நியர், திருமணமாகி இரண்டு வருடங்களின் பின்னரே பிரெஞ்சுப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பம் சமூக இணக்கமின்மை காரணமாக நிராகரிக்கப்படலாம். | திருமணத்தின் பின்னர் ஆறுமாத முடிவில் திருமணம் செய்த அந்நியர் பிரெஞ்சுப் பிரஜையாகலாம். |
| பிரெஞ்சுப் பிரஜாவுரிமை பெற்ற அனைவரும் பிரான்சிலேயே தங்களது "தேசிய இராணுவச் சேவையைச்" செய்யவேண்டும். (இதன் பிரகாரம் பிரெஞ்சு, அல்ஜீரிய அரசாங்கங்களுக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டும். | பிரெஞ்சு அல்ஜீரியப் பிரஜை பிரான்சிலோ அன்றி அல்ஜீரியாவிலோ தனது இராணுவச் சேவையைச் செய்யலாம். |

துப்பாக்கியால் சுடும்போது சிப்பாய்கள் முழந்தாளில் நிற்கிறார்கள். அவர்கள் மன்னிப்புக்கோரும் பாணியில்தான் அவ்வாறு நிற்கிறார்கள் என்று எனக்குப்படுகிறது.

- VOLTAIRE


அரச முத்திரையுடன் அசல் 22 கரட் தங்க நகைகளை
வழங்கும் உங்கள் நகை மாளிகை

GOLF JEWELLERY

தரத்தில் சிறந்த
தாலிக்கொடி
ஜிப்சி, தோடு
முத்துச் சங்கிலி
மோதிரம், சங்கிலி
காப்பு, கைச்சங்கிலி
பென்ரன் வகைகள்
கற்கள் பதித்த
மோதிரங்கள்
இன்னும்.....



அழகு சாதனங்கள்
அன்பளிப்புப்
பொருட்கள்
மணிக்கூடுகள்
இலங்கை, இந்திய
சிங்கப்பூர், லண்டன்
ஆடை வகைகள்
எவர் சில்வர்
பாத்திரங்கள்
இன்னும்.....

8A, RUE DE PANAMA - 75018 PARIS
TEL: 42 59 22 38 - FAX: 42 59 40 59
Mo: Chateau rouge




படிப்பகம்

www.padippakam.com

# ஐரோப்பிய சமூகமும் அகதிகளின் எதிர்காலமும்

பன்னிரண்டு மேற்கு ஐரோப்பிய நாடுகளின் இணைப்புப் பற்றியும் அதன் ஆரம்ப நிலைகளான ஒப்பந்தங்கள் பற்றியும் அடிக்கடி பேசப்படுகின்றது. இறுதியாகச் கைச்சாத்திடப்பட்ட மஸ்ட்ரிச் ஒப்பந்தமானது இந்நாடுகளின் இணைப்பை மீளாய்வு செய்ய முடியாதளவுக்குக் கொண்டுவந்து விட்டதென்றே சொல்லவேண்டும். இறுதியான, பூரணமான பொருளாதார அரசியல் இணைப்புகள் எக்கால கட்டத்தில், எவ்வளவு கால இடைவெளியில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே இருக்கின்றபோதிலும், ஐரோப்பியக் கூட்டுறவு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது என்பது அரசியல் நிபுணர்களின் கருத்தாகும்.

அனைத்து முனைகளிலும் நெருக்கடியை நோக்கி நிற்கும் இன்றைய உலகம், உற்பத்தியாளர்கள், நுகர்வோர்கள் என்ற இருபெரும் பிரிவுகளாகக் கூறுபட்டுக்கிடக்கின்றது. தொழில்நுட்பத்தின் துரித வளர்ச்சியானது, உற்பத்தியின் வளர்ச்சியை அதிகரித்தபோதும், தீவிர உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க, ஐரோப்பிய, ஜப்பானிய மும்முனை வியாபாரப் போட்டியில் மூன்றாவது மண்டல அல்லது வளர்முக நாடுகளைச் சிக்க வைத்துள்ளது.

பொருளாதாரச் சிக்கலுடன் இணைந்த அரசியற் சிக்கல்களும் இன, மதப் போராட்டங்களும் மூன்றாவது மண்டல நாடுகளில் தவிர்க்க முடியாதென்பதை மட்டுமல்லாது, அவ்வாறான போராட்டங்களோ, யுத்தங்களோ நடைபெறாத பட்சத்தில் தங்களின் சொந்த நாடுகளிலே பொருளாதாரச் சிக்கல்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் போய்விடுமென்பதையும் உணர்ந்த ஆயுத உற்பத்தி நாடுகள், குறிப்பாக செல்வம் கொழிக்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகள், இவ்வாறான அரசியல் போர்ச் சூழ்நிலைகளால் அகதிகளின் வருகை தங்களின் நாடுகளை நோக்கிப் படையெடுக்கலாம் என்பதையும் முன்னுணர்ந்து, அவ்வாறான படையெடுப்பிலிருந்து தம்மைப் பாதுகாக்கும் தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். மேன்மேலும் தாழ்நிலையை அடைந்து கொண்டு செல்லும் பூகோளத்தின் தெற்கிலிருந்து செல்வம் கொழிக்கும் தங்களது வடக்கைப் பாதுகாக்க வேண்டி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றே "அரசியல் அகதியுரிமை" மீதான அடிப்படையிலான மாற்றங்களாகும். ஜெனிவா ஒப்பந்தத்தில் வரையறை செய்யப்பட்ட இவ்வுரிமையானது இணையும் ஐரோப்பிய நாடுகளின் ஒருமித்த நிர்வாகத்தின்கீழ் பரிபாலனம் செய்யப்படவுள்ளது. இணையும் அங்கத்துவ நாடுகளின் பிரஜைகளின் உரிமை பற்றியும், இந்நாடுகளில் வாழும் அந்நியர்களின் உரிமை பற்றியும், உள் எல்லைகளுக்குள் மனிதர்களதும், உடமைகளினதும் இடப்பெயர்வு பற்றியும் இணையும் பன்னிரண்டு ஐரோப்பிய நாடுகளும் ஒன்றிணைந்து "செங்கன் ஒப்பந்தத்தை" (Schengen Convention) கைச்சாத்திட்டுள்ளன. இவ்வொப்பந்தத்தின் ஏழாவது அத்தியாயம், அரசியல் அகதியுரிமை கோருவோருடைய விண்ணப்பங்களை ஆய்வு செய்வது பற்றியும் அவர்களின் உரிமை பற்றியும் வரையறை செய்துள்ளது.

இவ்வொப்பந்தத்தின் ஏழாவது அதிகாரத்தின் முதலாவது சரத்தானது, ஜெனிவா ஒப்பந்தத்தினால் கைச்சாத்திடப்பட்டு வரையறை செய்யப்பட்ட அகதியுரிமையைப் பெறும் உரிமையை தொடர்ந்து



படிப்பகம்

www.padippakam.com

பேணுவதாகக் கூறுகின்றது.

■ அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும் தமது எல்லைக்குள் விண்ணப்பிக்கப்பட்ட அரசியல் அகதியுரிமை கோரும் விண்ணப்பங்களைப் பரிசீலிக்க கடமைப்பட்டுள்ளன.

■ இருப்பினும் எந்த ஒரு அங்கத்துவ நாடும் அரசியல் அகதியுரிமை கோரும் எந்த ஒருவரையும் தனது தேசிய எல்லைக்குள் நுழைவதை மறுக்கலாம், நுழைந்தவரை சர்வதேச சட்டங்களுக்கமைய, வேற்று நாடொன்றுக்கு நாடுகடத்தலாம்.

■ அரசியல் அகதியுரிமை கோரும் ஒரவரின் விண்ணப்பத்தை அங்கத்துவ நாடுகளில் ஒரு நாடு மட்டுமே பரிசீலிக்கலாம். இவ்வாறு ஒரு விண்ணப்பத்தை பசிசீலிக்கும் பொறுப்பு பின்வருமாறு வரையைறை செய்யப்பட்டுள்ளது.

■ ஏதாவது ஒரு அங்கத்துவ நாடு, விருப்பத்தின் பேரில், தனது எல்லைக்குள் எல்லா அகதியுரிமை விண்ணப்பதாரிகளையும் அனுமதிக்கலாம். மீண்டும் அவர்களது விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்யலாம்.

* எந்த அங்கத்துவ நாடு, அரசியல் அகதியுரிமை கோருபவருக்கு வதிவிட அனுமதி (விசா) வழங்குகின்றதோ அந் நாடே அவரது விண்ணப்பத்தை ஆய்வு செய்யும் பொறுப்புடையது.

* ஏதாவது இரு அல்லது பல நாடுகள் அகதியுரிமை கோருபவருக்கு வதிவிட அனுமதி வழங்கினால், அதிககால வதிவிட அனுமதி வழங்கிய நாடே அவரது விண்ணப்பத்தை ஆய்வு செய்து தீர்மானிக்க வேண்டும்.

* அகதியுரிமை கோருபவருக்கு வழங்கப்பட்ட வதிவிட அனுமதி காலாவதியாகி விட்டபோதிலும் வழங்கப்பட்ட நாட்டின் எல்லையை அவர் தாண்டாத வரையிலும் அவர் பற்றிய அனைத்துப் பொறுப்பும் அவருக்கு வதிவிட அனுமதி வழங்கிய நாட்டையே சாரும். அவ்வாறின்றி அதிககாலம் வதிவிட அனுமதி வழங்கிய நாடொன்றுக்குள் விண்ணப்பதாரி சென்றால் அதிகால அனுமதி வழங்கிய நாடே அவர் பற்றி அனைத்துப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

* விசாவின்றி அங்கத்துவ நாடுகளுக்குள் அரசியல் அகதியுரிமைக்கு விண்ணப்பிப்பவர் பற்றிய பொறுப்பு, எந்த ஐரோப்பிய வெளிப்புற எல்லையைக் கொண்ட நாட்டினூடாக விண்ணப்பதாரி ஐரோப்பாவிற்குள் நுழைந்தாரோ அந்த நாட்டையே சாரும்.

* அங்கத்துவ நாடொன்றின் தூதுவராலயத்தில் விசா பெற்று, இன்னொரு அங்கத்துவ நாடொன்றினூடாகப் பிரயாணம் செய்ய "ரான்சிற்" விசா பெற்றுவரும் ஒரு அரசியல் அகதியுரிமை விண்ணப்பதாரி பற்றிய பொறுப்பு முதலில் அவருக்கு விசா வழங்கிய நாட்டையே சாரும்.

* ஏதாவது ஒரு அங்கத்துவ நாட்டினால் ஒருவரது அரசியல் அகதியுரிமை கோரும் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்ட பின்னர், சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரி புதிய விண்ணப்பமொன்றை வேறொரு அங்கத்துவ நாடொன்றில் செய்வாரெனில் அவ்விண்ணப்பம் முதலில் அவரது விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்த நாட்டினாலேயே பரிசீலனைக்குட்படுத்தப்படும்.

● அகதியுரிமை கோரும் விண்ணப்பங்களை எவ்வகையில் ஆய்வு செய்து தீர்மானிப்பதென்பதென்ற புதிய வரையறைகளை ஒவ்வொரு அங்கத்துவ நாடும் விரைவில் தீர்மானிக்கவேண்டும்.

● தனது எல்லைக்குள் நுழைந்து அகதியுரிமை கோரும் விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தை தான் பொறுப்பேற்க மறுத்து, சட்ட விதிகளின்படி அவரது விண்ணப்பத்தை ஆய்வு செய்ய வேண்டிய இன்னொரு அங்கத்துவ நாட்டிடம் ஒரு அங்கத்துவ நாடு கோரும் பட்சத்தில்



படிப்பகம்

www.padippakam.com

அந்நாடு அவரது உரிமையை ஆய்வு செய்யக் கடமைப்பட்டுள்ளது.

● ஒரு அகதியுரிமை விண்ணப்பத்தைப் பரிசீலிக்கும் அங்கத்துவ நாடு தனது தேசிய சட்டங்களுக்கமைய அதனைப் பரிசீலிக்கலாம்.

● ஒரு நாட்டில் அரசியல் விண்ணப்பம் செய்பவர் அவரது விண்ணப்பம் பரிசீலனைக்குட்படும் கால எல்லையில், சட்ட முரணாக இன்னொரு நாட்டிற்குள் நுழைந்தால், அவர் மீண்டும் விண்ணப்பத்தை பரிசீலிக்கும் நாட்டிற்குள் அனுப்பப்படுவார்.

● ஏதாவது ஒரு அங்கத்துவ நாடு ஒருவருக்கு ஒருவருட அல்லது அதற்கு மேற்பட்டகால வதிவிட உரிமை வழங்கியிருந்தால், சம்பந்தப்பட்டவர் இன்னொரு நாட்டில் அகதியுரிமை கோர முடியாது. அவ்வாறு அவர் கோரும் பட்சத்தில் அவரது விண்ணப்பம் கோரும் நாட்டிற்கு மாற்றல் செய்யப்படும்.

● ஒரு அங்கத்துவ நாடொன்றினால் முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரி ஒருவர் இன்னொரு அங்கத்துவ நாடொன்றில் அனுமதியின்றி நுழைந்தால் சம்பந்தப்பட்ட நபரை அவரது விண்ணப்பத்தை ஆய்வு செய்த நாடு மீண்டும் ஏற்க மறுக்கலாம்.

● அகதியுரிமை கோரும் விண்ணப்பதாரி ஒருவர் நாடுகடத்தப்பட்டால் அவர் வெறெந்த அங்கத்துவ நாட்டிலும் விண்ணப்பிக்க உரிமையற்றவர்.

● அகதியுரிமை கோரும் விண்ணப்பதாரி ஒருவரின் விண்ணப்பம் ஏற்கப்பட்டு அவருக்கு அகதியுரிமை வழங்கப்பட்டால், அவரது குடும்பத்தைச் சேர்ந்த வேறொருவரின் விண்ணப்பத்தை ஏற்காதுவிடும் உரிமை அங்கத்துவ நாடுகளுக்கு உண்டு. இதில் குடும்ப உறுப்பினர் எனக்கருதப்படுவது மனைவி, கணவன், 18 வயதிற்குக் குறைந்த பிள்ளைகள் அல்லது தாய் தந்தையர்.

● மனிதாபிமான கலாச்சாரக் காரணங்களுக்காக அங்கத்துவ நாடொன்று இன்னொரு அங்கத்துவ நாட்டிடம் குடும்ப இணைப்பு விண்ணப்பத்தைச் செய்யலாம். விண்ணப்பம் செய்யப்படும் நாடே இதுபற்றிய இறுதித் தீர்மானத்தை எடுக்கும்.

● ஒவ்வொரு நாட்டினதும் அகதியுரிமை விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்யும் அதிகார சபைகளாவன பின்வரும் விடயங்களை உடனுக்குடன் பரிமாறிக் கொள்ளும்.

* அகதியுரிமை விண்ணப்பம் சார்பான சட்ட மாற்றங்களும் அமுலாக்கல் நிபந்தனைகளும்.
* அகதியுரிமை கோருவோரின் மாதாந்த எண்ணிக்கை அவர்களின் நாடுகள் பற்றிய விபரங்கள்.
* திடீரென அதிகரிக்கும் சில குறிப்பிட்ட நாட்டவர்களின் விண்ணப்பங்களும் அதற்கான விளக்கங்களும்.
* அகதியுரிமை சம்பந்தமான அடிப்படை மாற்றங்கள்.

● அகதியுரிமை கோருவோரின் நாடுகளின் உண்மையான நிலை பற்றி அங்கத்துவ நாடுகள் கூட்டான ஆய்வு செய்து செய்திகளைச் சேகரிக்க வேண்டும். இதன் பொதுவான அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கப்படல் வேண்டும்.

● ஒவ்வொரு அங்கத்துவ நாடும் மற்றைய அங்கத்துவ நாடுகளுக்கு அகதியுரிமை கோரும் விண்ணப்பதாரி சார்பாக பின்வரும் தகவல்களை அனுப்பலாம்.

* சம்பந்தப்பட்ட பெயர், முகவரி, பிறந்த திகதி. தேசிய இனம். அவரது குடும்ப விபரம் போன்றவை பற்றிய முழுத்தகவல்கள்.
* அடையாள ஆவணங்கள், பிரயாண ஆவணங்கள்.
* விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதி செய்யக்கூடிய வேறு அனைத்து



படிப்பகம்

www.padippakam.com

ஆவணங்கள்.
* முன்னர் வசித்த இடங்கள், பயணம் செய்த நாடுகள் பற்றிய விபரங்கள்.
* அங்கத்துவ நாடுகளினால் வழங்கப் பட்ட விசா.
* அகதியுரிமை விண்ணப்பிக்கப்பட்ட இடம்.
* விண்ணப்பபிக்கப்பட்ட விண்ணப்பம் சார்பான நிலைப்பாடுகள்.

● தவிர, எந்த அடிப்படையில் ஒருவர் அகதியுரிமைக்கு விண்ணப்பித்தாரென்றும் எந்த அடிப்படையில் அவரது விண்ணப் பம் பரிசீலிக்கப்பட்டதென்றும் ஒரு அங்கத் துவ நாடு இன்னொரு அங்கத்துவ நாடொன்றிடம் கேட்கலாம். இவ்வாறான தகவல் பரிமாற்றம் விண்ணப்பதாரியின் அனுமதியுடனேயே செய்யப்படவேண்டும்.

● சம்பந்தப்பட்ட அதிகார சபைகளிற்கி டையில் மட்டுமே இவ்வாறான தகவல் கள் பரிமாறப்படும்.

● இவ்வாறான தகவற் பரிமாற்றம் ஒவ் வொன்றும் பரிமாற்றம் செய்யும் ஒவ்வொரு அதிகார சபையினாகுறித்து வைக்கப்படும்.

இவ்வாறான "Schengen Convention" இனால் தீர்மானிக்கப்பட்ட விதிமுறைக ளாவன 1993ம் ஆண்டு யூன் மாதத்திதி லிருந்து நடைமுறைக்கு கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டிருந்தும், ஐரோப்பிய பாராளுமன்றமானது இதனை எதிர்வரும் டிசம்பர் இறுதிவரை பின்போட்டுள்ளது.
இவ்வொப்பந்தம் நிறைவேற்றப்படுமி டத்து, பிரான்சிற்குள் விசாவின்றி அக தியுரிமை கோருவோரின் விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டு எந்த நாடுகளுக்கூடாக அவர்கள் நுழைந்தார்களோ அந்த நாடு களுக்கு அனுப்பப்படலாம்.
பிரான்ஸ் புவியியல் ரீதியாக பல ஐரோப் பிய சமூக அங்கத்துவ நாடுகளால் சூழப் பட்டிருப்பதானது இங்கு வரும் அகதிக ளின் எண்ணிக்கையை மென்மேலும் குறைப்பது மட்டுமன்றி, O. F. P. R. A. வினுடைய செயற்பாடுகளையும் குறைக் கக்கூடிய, இன்னும் சொல்லப்போனால் இல்லாமல் செய்யக்கூடிய சாத்தியக்கூ றுகள் தென்படாமலில்லை.

இதுபற்றிய கேள்விகள் சந்தேகங்கள் ஏதுமிருப்பின் எமது பாடசா லைக்கு எழுதி அனுப்ப வேண்டப்படுகிறீர்கள். தொடர்ச்சியான அடுத்துவரும் தகவற்சுருளில் பதில்கள் வழங்கப்படும்.

பாரிசில் சிறந்த தரமான
பதிப்பக வேலைகளுக்கு

Tel: 40 37 41 85 - 39 92 54 39

பாரதி பதிப்பகம்



படிப்பகம்

www.padippakam.com

CFA (Centre de Formation et d'apprentissage) எனப்படும் தொழிற்ப
துறையிலுமான தொழிற்கல்வியை வழங்குகின்றது. பா

**1 CFA DE LA COUTURE**
45, rue Saint-Roch
75001 PARIS
Tél. : 42.61.00.77

**2 CFA INGENIEURS 2000**
292, rue Saint-Martin
75002 PARIS
Tél. : 47.67.84.54

**3 CFA DE LA VENTE**
22, rue Montgolfier
75003 PARIS
Tél. : 44.92.88.88

**4 CFA DE L'ECOLE DE TRAVAIL ORT**
4 bis, rue des Rosiers
75004 PARIS
Tél. : 42.72.03.45

**5 CFA DE LA MIROITERIE**
4, rue des Feuillantines
75005 PARIS
Tél. : 43.26.74.11

**6 CFA DU CARTONNAGE**
28, rue de l'Abbé-Grégoire
75006 PARIS
Tél. : 49.54.28.00

**7 CFA TECHNOLOGIQUE FERRANDI**
11, rue Ferrandi
75006 PARIS
Tél. : 49.54.28.00

**8 CFA TECHNOLOGIQUE GREGOIRE**
28, rue de l'Abbé-Grégoire
75006 PARIS
Tél. : 49.54.28.00

**9 CFA D'INFIRMIER**
81, rue de Monceau
75008 PARIS
Tél. : 45.63.28.66

**10 CFA DES METIERS COMMERCIAUX & FINANCIERS**
50, rue de la Boétie
75008 PARIS
Tél. : 49.53.43.23

**11 CFA DE LA COMPTABILITE**
81, rue Saint-Lazare
75009 PARIS
Tél. : 48.74.33.15

**12 CFA DES COMMERCES DE L'ALIMENTATION**
10, rue Juliette-Dodu
75010 PARIS
Tél. : 42.40.00.01

**13 CFA DES FLEURISTES**
17, rue Cail
75010 PARIS
Tél. : 46.07.14.50

**14 CFA DE LA COIFFURE**
27, rue Lucien-Sampaix
75010 PARIS
Tél. : 46.07.31.10

**15 CFA DE LA BUREAUTIQUE APPLIQUEE**
12, rue Alexandre-Parodi
75010 PARIS
Tél. : 40.03.15.50

**16 CFA DE LA BUREAUTIQUE APPLIQUEE**
(Annexe) LEC Charles-de-Gaulle
9, rue Martel
75010 PARIS
Tél. : 42.46.18.05

**17 CFA DES TELECOMMUNICATIONS**
(Installateurs en Télécommunications et Courants Faibles)
6 - 8, impasse Delépine
75011 PARIS
Tél. : 43.71.66.96

**18 CFA DES EQUIPEMENTS ELECTRIQUES**
6 - 8, impasse Delépine
75011 PARIS
Tél. : 43.71.66.96

**19 CFA DE LA COIFFURE**
7, rue Darboy
75011 PARIS
Tél. : 43.57.18.80

**20 CFA DE LA COIFFURE**
6, rue Froment
75011 PARIS
Tél. : 43.55.78.64

**21 CFA PUBLIC DORIAN**
74, avenue Philippe-Auguste
75011 PARIS
Tél. : 43.70.44.42

**22 CFA DES METIERS DE L'AMEUBLEMENT**
8, passage de la Bonne-Graine
75011 PARIS
Tél. : 48.06.57.29

**23 CFA DES METIERS DE LA VIANDE**
37, boulevard Soult
75012 PARIS
Tél. : 43.45.23.72

**24 CFA DE LA MECANIQUE AUTOMOBILE**
99, rue du Chevaleret
75013 PARIS
Tél. : 45.86.66.61

**25 CFA DE LA LIBRAIRIE - PAPETERIE**
10-18, rue des Terres-au-Curé
75013 PARIS
Tél. : 45.85.70.50

**26 CFA DES METIERS DE L'AUDIOVISUEL**
20, rue de Châtillon
75014 PARIS
Tél. : 45.41.24.42

**27 CFA DE LA GESTION ET DE LA BUREAUTIQUE**
16, rue du Moulin-Vert
75014 PARIS
Tél. : 45.45.02.44

www.padippakam.com

)சி நிறுவனங்கள் 16க்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்களுக்கு அனைத்துத்
பில் உள்ள இந்நிறுவனங்களின் முகவரிகள் பின்வருமாறு:

**28 CFA DE L'OPTIQUE**
163, rue de Sèvres
75015 PARIS
Tél. : 47.83.96.04

**29 CFA DU BATIMENT ET DES TRAVAUX PUBLICS**
Cours Saint-Lambert
7, rue Saint-Lambert
75015 PARIS
Tél. : 45.54.92.32

**30 CFA DE L'ECOLE HOTELIERE**
20, rue Médéric
75017 PARIS
Tél. : 42.27.63.70

**31 CFA DE LA MECANIQUE AUTOMOBILE**
51 bis, rue des Epinettes
75017 PARIS
Tél. : 42.29.42.22

**32 CFA DES METIERS DU CYCLE ET DU MOTOCYCLE**
51 bis, rue des Epinettes
75017 PARIS
Tél. : 46.27.82.28

**33 CFA DES METIERS DE LA TABLE**
19, rue Jacques-Ibert
75017 PARIS
Tél. : 44.09.12.00

**34 CFA DE LA GRANDE DISTRIBUTION**
2, rue de Logelbach
75017 PARIS
Tél. : 44.40.01.01

**35 CFA NEGOCIA**
Annexe Vente du CFA de la CCIP
8, avenue de la Porte-Champerret
75017 PARIS
Tél. : 44.09.31.00

**36 CFA DE LA MECANIQUE AUTOMOBILE**
6, rue Charles-Hermite
75018 PARIS
Tél. : 40.37.48.58

**37 CFA DE L'INDUSTRIE DU TRAVAIL DU BOIS**
3, rue Pierre-Budin
75018 PARIS
Tél. : 42.55.95.64

**38 CFA DE LA VENTE**
Annexe Montgolfier
48, rue Stephenson
75018 PARIS
Tél. : 44.92.88.88

**39 CFA DE LA DISTRIBUTION**
48, rue Stephenson
75018 PARIS
Tél. : 42.92.88.88

▶ *En encadré, les nouveaux C.F.A.*

**40 CFA HOTELIER BELLIARD**
135, rue Belliard
75018 PARIS
Tél. : 46.27.93.92

**41 CFA PEINTURE-VITRERIE-REVETEMENT**
42, rue de Romainville
75019 PARIS
Tél. : 42.02.02.92

**42 CFA DES METIERS DE LA CHARCUTERIE**
17-25, rue Goubet
75019 PARIS
Tél. : 42.39.19.64

**43 CFA DE L'ENTRETIEN DES TEXTILES**
82, rue Curial
75019 PARIS
Tél. : 40.36.66.66

**44 CFA DES METIERS DE LA PATISSERIE**
17-25, rue Goubet
75019 PARIS
Tél. : 42.39.19.64

**45 CFA DE LA PHARMACIE**
59, rue Planchat
75020 PARIS
Tél. : 43.56.30.30

**46 CFA DE LA VENTE**
Annexe Montgolfier
33, rue Saint-Blaise
75020 PARIS
Tél. : 44.92.88.88

**47 CFA DE LA DISTRIBUTION**
Annexe Stephenson
33, rue Saint-Blaise
75020 PARIS
Tél. : 44.92.88.88

**48 CFA MECAGIM**
79, rue de Buzenval
75020 PARIS
Tél. : 43.70.63.60

**49 CFA DES ARTS GRAPHIQUES**
61, rue Orfila
75020 PARIS
Tél. : 48.99.44.71

**50 CFA IFITEP INSTITUT DE FORMATION D'INGENIEURS EN TECHNIQUES ELECTRONIQUES DE PARIS**
Université PARIS VI
4, place Jussieu - Case 232
75252 PARIS CEDEX 05
Tél. : 44.27.71.40

**51 CFA TECHNOLOGIQUE GAMBETTA**
247, avenue Gambetta
75971 PARIS CEDEX 20
Tél. : 40.31.46.00

படிப்பகம்

www.padippakam.com


MALA'S

# மாலா மளிகை

பிரான்சில் கடந்த 10 ஆண்டு கால மளிகைப் பொருள்
விநியோகஸ்தர்களின் முன்னோடிகள்
அன்பளிப்புப் பொருட்கள், இலங்கை இந்திய உணவு வகைகள்,
பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றின் ஏக விநியோகஸ்தர்கள்

22, RUE LABAT, 751018 PARIS - 78 BD. BARBES 75018 PARIS
TEL: 42 62 01 23 - Mo: Marcadet Poissonniers
71, AV. EDOUARD VAILLANT, 93500 PANTIN
TEL: 48 40 57 24 Mo: Aubervilliers 4 Chemins
2, PLACE ROGER SALENGRO, 95100 GARE LES GONESSE
TEL: 39 93 93 48 Gare - R. E. R: Garges Sarcelles

## உணவகம் - FAST FOOD

21, RUE LABAT, 75018 PARIS
Mo: Marcadet Poissonniers



அன்பான உபசரிப்புக்கு

# பாண்டிச்சேரி உணவகம்

உங்களுக்கு பிரியமான
மசாலா தோசை, கொத்துரொட்டி, பிரியாணி,
போன்ற நம்நாட்டு உணவுவகைகளை உண்டு மகிழ்ந்திட
நீங்கள் குடும்பத்துடன் நாடவேண்டடிய இடம்

# பாண்டிச்சேரி உணவகம்

- குடும்பத்தினருக்கு தனி இடவசதியுண்டு
- முதல் வருகையின்போது நண்பனின் அன்பு டீ உண்டு

3, RUE PERDONNET, 75010 PARIS
Mo: La Chapelle ou Gard du Nord
RESERVATION - 40 37 01 49




படிப்பகம்

www.padippakam.com

# ■ ■ ■ ஒரு தொடர்பும் துண்டிப்பும் ■ ■ ■

இடம் பெயர்ந்து வாழும் தமிழராகிய எமது குழந்தைகளின் எதிர்காலத்தை சரியாகச் செப்பனிட வேண்டியது இடர் கொண்டு நிற்கும் நம் இனத்தின் தலையாய கடமைகளில் ஒன்றாகும். வெளிநாட்டவர்களின் செறிவுகூடிய, பின்தங்கிய பிராந்தியங்களில், விரும்பியோ விரும்பாமலோ பல தமிழ்க் குடும்பங்கள் தங்களது இருப்பிடத்தை அமைத்துக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில், இப்பிராந்தியங்களில் வாழும் தமிழ்க் குழந்தைகள் பாடசாலை குடும்பம் என்ற இரண்டு முரண்பட்ட முனைகளுக்குள் இடர்பட்டுக் கொண்டிருப்பது பலரால் அவதானிப்கப்பட்டுள்ளது.

பலர் இந்நிலையை அறியமுற்படவோ, அல்லது அதற்கான மாற்று வழி ஒன்றைத் தேடவோ மறுக்கின்றனர். சிலர் "அப்பாவித்தனமாக" எல்லாம் சரியாக நடக்கின்றது என்று புளகாங்கிதம் அடைகின்றனர்.

எதிலும் முற்போக்கான, பூரணத்துவத்தை நோக்கி நகரும், நாளைய உலகிற்கு, உயர்ந்த பண்புள்ள கௌரவப் பிரஜைகளை உருவாக்கும் பணியில் இன்றைய தமிழ்க் குடும்பங்கள் தலைமைப்படுத்தத் தவறுமெனில், தம் சுவடுகளை தாமே அழித்த தண்டனையிலிருந்து அவர்கள் தப்பமுடியாது"

பின்தங்கிய ஒதுக்கப்பட்ட, வெளிநாட்டவர்களின் செறிவு கூடியதால் கல்வி நிர்வாக அதிகார சபைகளின் கவனிப்புகள் குறைந்த பாடசாலைகளில் தமிழ்க் குழந்தைகள் கல்வி கற்கத் துண்டிக்கப்பட்டுள்ளது தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றது. பல தமிழ்க்குழந்தைகளுடனும், சிறுவர்களுடனும் உரையாடிப் பார்த்ததன் மூலமும், பின்வரும் ஒரு கசப்பான உண்மையை உணரக்கூடியதாக உள்ளது.

இக்குழந்தைகளையும் சிறுவர்களையும் இருபெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

முதற்பிரிவினர் சிறுபான்மையினர். பாடசாலையில் முன்னேற்றத்தைக் காட்டும் இவர்கள் சக மாணவர்களுடன் சுமூகமாகப் பழகும் தன்மை கொண்டுள்ளார்கள். இவர்களின் நடைமுறைப் பழக்க வழக்கங்களும், சிந்தனை விதமும், பேச்சும்கூட பாடசாலை வாழ்வின் பிரதிபலிப்பையே காட்டுகின்றன. குறிப்பாக இவர்களின் பாடசாலையிலுள்ள மற்றைய சிறுவர்களின் பழக்க வழக்கங்களில் மிகுந்த பண்பு கொண்டு காணப்படுகிறார்கள். இந்நிலையானது இவர்களின் பாடசாலை வாழ்வில் இவர்களுக்கு சிரமத்தை மிகவும் குறைத்துக் கொள்ள உதவியளிக்கிறது.

ஆனால், மிகவும் பாரதூரமான விளைவாக, இவர்களுக்கும் இவரது குடும்பத்திற்கும் இடையில் இடவெளி அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இவ்வாறு தனக்கும் தனது பெற்றோருக்கும் இடையில் இருக்கும் இடைவெளியை அதிகரித்துக் கொள்ளும் பிள்ளையானது பெற்றோரையும் அவரது கலாச்சாரத்தையும் புரிந்து கொள்ள முடியாமல் தவிக்கின்றது. தனிமையில் தொலைக்காட்சியில் காட்டூன் படங்களை பொழுது போக்காக்கிக் கொள்கின்றது.

இரண்டாவது பிரிவினர் பெரும்பான்மையினர். கல்வி நிலையில் மந்த நிலையைக் காட்டும் இவர்களின் நிலை பரிதாபகரமானது. பாடசாலையில் தங்களைத் தனிமைப்படுத்தி ஒதுங்கிக் கொள்



படிப்பகம்

www.padippakam.com

ளும் இவர்களது சுபாவமானது சக மாணவர்களிடமிருந்து இவர்களைப் பிரிப்பதுடன், சாதாரண பாடசாலை வாழ்வில் இவர்களுக்கு அக்கறையற்றவொரு தன்மையையும் உருவாக்குகின்றது. இந்நிலை மிகவும் ஆபத்தானது மட்டுமன்றி இவர்களின் பிற்கால வாழ்வே இதனால் துண்டிக்கப்படக்கூடிய வாய்ப்புக்களை அதிகரிக்க வைக்கின்றது.

ஆனால் இவர்களுக்கும், இவர்களது குடும்பத்திற்கும் இடையில் நிலவும் உறவானது உறுதியானதாகவுள்ளது. பெற்றாரையும் அவர்களது பழக்க வழக்கங்களையும் மிகவும் இலகுவாகவும் தெளிவாகவும் புரிந்து கொள்ளும் இவர்கள் பலரின் முக்கிய பொழுதுபோக்குச் சாதனங்களில் ஒன்றாக இடம்பெறுவது வீடியோ தமிழ்ச் சினிமாப் படங்கள் என்பது கவலைக்குரிய கண்டுபிடிப்பாகும்.

பொருளாதாரப் போட்டியிலும், தங்கத் தேடலிலும் தங்களையிழந்த பெற்றார் ஒருபுறம், தேவையின் சுமையில் நெரிந்து மூச்சுத் திணறும் பெற்றார் மறுபுறமுமாக தமிழ்ச் சமூகம் இரண்டாகப் பிரிந்து கிடக்கும் இவ்வேளையில், இப்பெற்றார்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்கால வாழ்வைப் பற்றிய சரியான பிரக்ஞை கொண்டவர்காளக மாறவேண்டியது அவசிய உடனடித் தேவையாகும்.
சமூகத்தைப் புரிந்து கொண்டு பிள்ளையானது பெற்றாரைப் புரிந்து கொள்ள முடியாமலும், பெற்றாரைப் புரிந்து கொண்ட பிள்ளை சமூகத்தைப் புரிந்து கொள்ளாமலும் திண்டாடி இருபக்க இழுப்பில் ஈடாடி நிற்கும் பிள்ளையானது சமூக உள நிலைபெற்று ஆரோக்கிய அறிவையும், சுயபிரக்ஞையையும் அடையவேண்டுமெனில், இவ்வாறான இழுபடுநிலையிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டும், அவ்வாறு விடுவிக்க வேண்டுமெனில் பெற்றாரின் தியாக உணர்வு மிகவும் இன்றியமையாதது மட்டுமன்றி இவ்விடயத்தில் சரியான தீர்வை அவர்களால் மட்டுமே கொண்டுவரமுடியும்.

தமது பிள்ளைகள் வாழும் சமூகத்தைப் பற்றிய தெளிவான அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டியது ஒவ்வொரு பெற்றாரின் கடமையாகும். இவ்வாறு இவர்கள் பெறும் அறிவானது தங்களது பிள்ளைகளுக்கும் அவர் வாழும் சமூகத்திற்கும் இடையிலுள்ள உறவின் தன்மையைப் புரிந்து கொள்ளவும் பயன்படுகிறது. இப்புரிந்துணர்வு பெற்றாரிடத்தில் தோன்றும் போது, அவர்களது போக்கில் நிச்சயமாகச் சிறிய மாற்றங்கள் ஏற்படுத்துவது மட்டுமல்லாது, தங்களைத் தங்களின் குழந்தைகள் புரிந்து கொள்ளவும், சமூகத்தில், பாடசாலையில் சரியான முறையில் அவர்கள் வளர்ச்சியடையவும் உதவுமென்பது உறுதியாகும்.

மற்றவர்களுடைய கருத்துக்களை யாரும் ஏற்கிறார்களில்லை. ஆனால், மற்றவர்களுடைய காசுகளை ஏற்கிறார்கள். ஆகவே கருத்தை விட காசு மேலானது.

- SWIFT

யாரையாவது நிந்திக்க விரும்புகிறீர்களா? தீமை கூறாதீர்கள். அவரைப்பற்றி அதிகமாகவே நன்மையைக் கூறுங்கள்

- SIEGFRIED



படிப்பகம்

www.padippakam.com


லா சப்பலில் உங்கள் அபிமான மளிகை ஸ்தாபனம்

# காயத்திரி

- லீலா தயாரிப்புகளின் ஏக விநியோகஸ்தர்கள்
- HORLICKS ஏக விநியோகஸ்தர்கள்

மீன், நண்டு, சுறா, இறால்
அனைத்து மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள்
கொம்பக்ற் டிஸ்குகள், தமிழ், சிங்கள ஓடியோ, வீடியோ
கசட்டுக்கள் வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு

**குறிப்பு: புதன் கிழமை தவிர்ந்த எல்லா நாட்களும் திறந்திருக்கும்**

210, RUE DU FG. ST. DENIS, 75010 PARIS, TEL: 42 09 22 43 - FAX: 46 07 90 34
Mo: La Chapelle ou Gare du Nord



அழகுக்கு அழகு செய்யும் அதி நவீன ஆடைத் தெரிவுகளுக்கு

# ஆதவன்

குழந்தைகள், சிறுவர்கள், ஆடவர்கள், நங்கையர்களின்
உடைகளைத் தெரிவு செய்யவும், திருமணப் பட்டுப் புடவைகள்
பட்டுவேஷ்டிகள், பஞ்சாபி உடைகள், சாறிகள், சேட்ஸ், ஜீன்ஸ், சட்டைகள்

மற்றும் பழைய புதிய வீடியோ
கசெட்டுக்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும்

## ATHAVAN TEXTILES & VIDEO

23, RUE PERDONNET, 75010 PARIS, TEL: 42 05 03 24 - 42 05 03 27
Mo: La Chapelle ou Gare du Nord




படிப்பகம்

www.padippakam.com

# தொழிலாளர் சிக்கல்கள்

- மாதவன்

ஐந்துவருடங்களாக தொழில் நிறுவனம் ஒன்றில் பணியாற்றிவந்த நண்பன் ஒருவன் அண்மையில் வேலேயினின்று நீக்கப்பட்டான். காரணம் தனது சேவைக்குரிய சம்பள உயர்வுபற்றி முதலாளியுடன் கதைத்ததுதான்.
இன்னுமொரு நண்பன், ஒரு வருடத்திற்கு மேலாக, ஒரு தொழில் நிறுவனமொன்றில் வேலேபார்த்து வந்தான். தொழிலில் சேர்ந்து ஒரு வருடமளவும் அவன் தொடர்பான தொழில் ஒப்பந்தம் (CONTRACT ) செய்யப்படவில்லை. அந்த ஒருவருடமும் அவன் மிகவும் கஷ்டத்துக்குள்ளானான். இந்நாட்டுச்சட்டப்படி ஒருவர் தொழில் செய்யும்போது அவரது சம்பளத்தில் அவரது சமுகப்பாதுகாப்பு நிதி கழிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்படுகின்றது. அதே போல் அவருக்கு வேலை இல்லாத காலங்களில் உதவுவதற்கான பாது காப்பு ஏற்பாடுகள் தொடர்பாகவும் பணம் கழிக்கப்படுகின்றது.

நண்பனுக்கு வேலை ஒப்பந்தம் இல்லையென்ற காரணத்தால் சமூகபாதுகாப்பு நிறுவனத்தின் உதவிகளை இழந்தான். அக்காலப்பகுதியில் அவன் பெறக்கூடிய மருத்துவச் செலவுக்கான பெருந்தொகையையும் இழந்தான். அடுத்து, சட்டப்படி அவனுக்குரிய வேலை ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஒப்பந்தத்
திலும் அனைத்தும் சட்டபபடி தெளிவாக எழுதப்பட்டிருந்ததாயினும் நடைமுறையில் எதுவும் கவனிக்கப்படவில்லை. கடந்த ஒருவருடமும் எப்படியோ அப்படியேதான். நாளொன்றுக்கு 10 மணி நேரவேலை, வாராந்தம் 6 நாள் என்றும், அனைத்து அரச விடுதலை நாட்களும்வேலையென்றும், ஞாயிறு வேலையென்றும் வேலை வாங்கப்பட்டது. அதைவிட இந்த நாட்டில் மிகக்குறைந்த சம்பளமாகக் கணிக்கப்பட்டுள்ள 'சிமிக்' அடிப்படைச்சம்பளமே பெற்றுவந்தான். ஒரு சம்பள தினத்தன்று துணிந்து தன் சம்பள உயர்வுபற்றிக் கேட்டுவிட்டான். தொழில் உரிமையாளனோ ஏதோவெல்லாம் கூறிச் சமாளித்தான். நண்பன் விட்டுக்கொடுப்பதாயில்லை. தனது மாதாந்த வேலைக்குரிய சரியான சம்பளம் கணக்கிடப்படல் வேண்டுமெனவும் அதாவது பத்து மணிநேர வேலைப்படி வாராந்தம் ஆறு நாள் மொத்தம் 240 மணி நேரவேலைக்குரிய சம்பளம் கணக்கிடப் படல் வேண்டு மெனவும் வாதாடினான். உரிமையாளன் தடுமாறினான். பிறகு ஒருமாதிரி தன்னேச்சுதாகரித்துக்கொண்டு "சரி வேலையைக்கவனி பார்க்கலாம்" என்று அனுப்பிவிட்டான். ஒரு வாரம் கழித்து அடுத்தடுத்து இரண்டு பதிவுக்கடிதங்கள். ஒன்று, அவன் வேலையில் கவனமில்லாமல் இருப்பதால் எச்சரிக்கின்றனவாம். அடுத்தது, அதற்கும் அடுத்தவாரம். அவனே வேலை நீக்கம் செய்வது தொடர்பான விசாரணைக்காம். விசாரணைக்கு சென்ற அவனிடம் கடமையில் கவனமின்மை, மேலதிகாரிகள் சொன்ன வேலைகளை செய்யமறுத்தமை போன்ற அநியாயமான குற்றச்சாட்டுக்கள். நியாயத்தை கேட்டான். அவர்கள் தம்மையே நியாயப் படுத்தினார்கள்.
வேலேபோனது. இன்று வேலை தேடி அலைந்து கொண்டிருக்கிறான்.

இந்த நிலை எம்மில் பலருக்குள்ளது. எமது உரிமைகளைச் சரியாக அறிந்து கொள்ளமுடியாத நிலையில் -தொழில் தருனரின் கெடுபிடிக்குள் சிக்கிக்கிடக்கிறோம். தனிப்பட்ட முறையில் ஒரு பல



படிப்பகம்

www.padippakam.com

மான எதிரணியை நம்மால் எதிர்க்கமுடியாதென்பதும் உண்மையே. ஆனால் சட்டப்படி அமைக்கப்பட்ட தொழிற் சங்கங்கள் மூலமாக -அவர்களுடன் எம்மையும் இணைத்துக்கொண்டு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கலாம்.

தொழிற் சங்க அமைப்புக்கள் தொழில் ரீதியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தாம் பணியாற்றும் நிறுவனங்கள் தொடர்பாகவும் அவற்றின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் அங்கே ஆலோசனைகள் பெற்றுக்கொள்ள வசதிகள் உண்டு.

எமது தொழில் தொடர்பாக - அது சார்பான சட்டங்கள், நடைமுறைவிதிகள், கூட்டு ஒப்பந்தங்கள் தொடர்பாக நாம் பலவிடயங்களை அறியாமல் இருக்கிறோம். இக்காரணங்களால் பலர் அன்றாடம் பல தொழிற் சிக்கல்களைச் சந்தித்தும் அவற்றை நிவர்த்திசெய்ய முடியாத நிலையில் தம் தொழிலையும் வருமதிப் பணத்தையும் இழந்துள்ளமையும், பலர் மென்மேலும் தொழில் கொள்வோரின் பிடிக்குள் சிக்கி மீள முடியாமல் தம்மையே இழந்து வருவதையும் காணக்கூடியதாயுள்ளது.

தொழிற்சட்டம் (CODE DE TRAVAIL), இந்நாட்டின் தொழில் தொடர்பான பொதுவான சட்டமாகும். இதைவிட கூட்டு ஒப்பந்தம் ( CONVENCTION COLLECTIVE), நடைமுறைவிதிகள் (REGLEMENT INTERIEUR) ஆகியன தொழில் தொடர்பாக நாம் அறிந்திருக்க வேண்டிய பகுதிகள்.

மேலும் இச்சட்டங்களுக்குட்பட்ட வகையில் தொழில்கள் வகைரீதியாகப் பிரிக்கப்பட்டு அதற்கேற்ப தொழில் கொள்வோர் சங்கங்கள் -தொழிலாளர் சங்கங்கள் மத்தியில், தொழிலாளர் நன்மைகருதி கூட்டு ஒப்பந்தங்கள் (CONVENCTION COLLECTIVE) , செய்யப்பட்டு நாடு முழுவதும் நடைமுறையில் உள்ளன.

இவைதவிர ஒவ்வொரு தொழிற்தாபனமும் தொழிற்சட்டம், கூட்டு ஒப்பந்தம் ஆகியவற்றுக்குட்பட்ட வகையில் தமக்குரிய நடைமுறைவிதிகளை(REGLEMENT INTERIEUR ) ஆக்கிக் கொள்ளவேண்டும். இவ்விதிகள் அத்தாபனத்தில் பணியாற்றும் பணியார் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரின் ஆலோசனைக்கும் சமர்ப்பிக்கப்பட்டு பின் தொழில் பரிசோதகரின் ( INSPECTEUR DU TRAVAIL) அனுமதி பெறப்படல்வேண்டும். தொழில் செய்யும் இடம், பணியாளர்கள் உட்செல்லல் -வெளியேறல் தொழில் நிலையத்தின் உரிமைப்பொருட்களைப் பயன்படுத்தல் தொடர்பான விளக்கங்கள், மற்றும் வேலைக்கு பிந்திவருதல் அல்லது வராமல் விடுதல் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் ( உதாரணமாக- ஒருவர் சுகவீன காரணமாய் வேலைக்குச் செல்லவில்லையாயின் அது தொடர்பான மருத்துவ அத்தாட்சிப்பத்திரம் 48மணி நேரத்துள் அனுப்பி வைக்கப்படல்வேண்டும்) முதலியன இந்நடைமுறை விதியில் விளக்கப்பட்டிருக்கும்.
ஒழுங்காற்று நடவடிக்கைகள்: தொழிலாளி ஒருவர் குற்றம் செய்தால் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள். இவை பொதுவாக நாம் அறிந்திருக்கவேண்டியவையாகும்.

அவையாவன:-
(அ) குற்றம் தொடர்பாக அவரை எச்சரித்து கடிதம் அனுப்புதல்,
(ஆ) சம்பளமற்ற வேலை இடைநிறுத்தம்,
(இ) செய்யும் வேலைப் பதவியினின்று கீழிறக்கிவிடுதல்,
(ஈ) வேலை செய்யும் பகுதியில் இருந்து வேறு பகுதிக்கு மாற்றிவிடல்,
(உ) வேலைநீக்கம் செய்தல்- கடுங்குற்


படிப்பகம்

www.padippakam.com

றமாயின் முன்னறிவித்தலும் -சேவைப்ப ணமுமின்றி நிறுத்துதல்.

மேலும் குற்றஞ்சாட்டப்பட்டவர் தொடர் பாக அவரது பாதுகாப்புக் கருதி தொழில் கொள்வோர் செயற்படவேண்டிய முறைகளும் இவ்விதிகளில் குறிப்பிடப்பட் டுள்ளன. உதாரணம்: ஒருவர் மேற்காட் டிய 'அ' தவிர்ந்த ஏனைய தண்டனை கட்கு உள்ளாக்கப்படுமுன் அவர்,

* எழுத்துமூலம் அழைப்பாணை கொடுக்கப்பட்டு - விசாரிக்கப்படல்வே ண்டும்.
* அவ்வாறு நடைபெறும் விசாரணை யின் போது அந்நிறுவனத்தில் பணியாற் றும் ஒருவர்(குறிப்பாக பணியாளர் பிரதி நிதி அல்லது தொழிற்சங்கப் பிரதிநிதி) அவருக்கு உதவ அனுமதிக்க வேண்டும்.
* அவ்வாறு நடைபெறும் விசாரணை யின்போது குற்றங்கள் பணியாளருக்கு தெரிவிக்கப்பட்டு அதற்குரிய விளக்கங்கள் பெறப்படல்வேண்டும்.
* விசாரணை நடைபெற்று ஒரு மாதத் துள் தண்டனை வழங்கப்படலாம்.

### சுகாதாரம் தொடர்பாக:

தொழில் செய்யும் இடத்தில் மதுபா னம், போதைவஸ்து பாவித்தல் தடை செய்யப்பட்டுள்ளது தொடர்பான விளக்கங் கள் காட்டப்பட்டுள்ளன. மற்றும் தொழில் செய்யும் இடத்தில் வைத்தே உணவு கொள்ளல்-அவை தொடர்பான விளக்கங் கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாதுகாப்புத் தொடர்பாக:

பொதுவாகவுள்ள பாதுகாப்பு விதிகளை மீறல் குற்றமாகும். (உதாரணமாக புகைத்தல் தடைசெய்யப்பட்ட பகுதிகளில் புகைத்தல் , பாதுகாப்புக்கருவிகளை தேவையற்றவிதத்தில் கையாளல் )
எந்த ஒரு வேலையாளும் தான் வேலை செய்யும் இடம் சுகாதாரத்திற் கும், பாதுகாப்புக்கும் பங்கமாயிருப்பதாக உணர்ந்தால் அது தொடர்பாக எழுத்தில் தன் வேலைகொள்வோருக்கு அறிவிக்க வேண்டும். இது சட்டப்படியான அவரது உரிமையாகும்.
மேற்காட்டிய நடைமுறைவிதிகள் தொடர் பான அனைத்தும் தொழிற்சட்டம் art. L 122. 33 ல் இருந்து art. L 122. 39 வரைக் குட்பட்டதாகும். இவ்விதிகள் தொழில் நிறுவனத்தில் அனைத்துத் தொழிலாளர் பார்வைக்கும் பொதுவான இடத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது சட்டம்.

ஒரு தொழிலாளி நியாயமான முறை யில் நடந்துகொண்டாலும் தொழில் கொள்வோரின் கெடுபிடிகளால் மிகவும் பாதிப்படையவும் சாத்தியம் உண்டு. புதிதாக ஒருவர் வேலைக்குச் சேர்க்கப் படும்போது அவர் தொடர்பாக ஒரு வேலை ஒப்பந்தம் செய்யப்படல்வேண் டும். அவரது தொழில் தன்மையைப்பொ றுத்து ஒன்றில் இருந்து மூன்று மாதங்கள் வரையான தகுதிகாண்காலம் அவ்வொப் பந்தத்தில் குறிக்கப்படல் வேண்டும். ஞாயிறும் அரச விடுமுறைதினங்களும் இந்நாட்டின் விடுமுறைதினங்களாகும். எனினும் தேவையின் நிமித்தம் சில நிறுவனங்கள், தொழிற்தாபனங்கள், வர்த் தக நிலையங்கள், அந்நாட்களில் வேலைசெய்ய சட்டப்படியும் அனுமதிகளு ண்டு. எனினும் தொழிலாளர்களுக்கு சுழற்சி முறையில், அல்லது அந்நாட் களை ஈடுசெய்யக்கூடிய வகையில் மாற்று விடுமுறைதினங்கள் சட்டப்படி உரிமையானதாகும். இதைவிட வருடாந்த விடுமுறையும் உண்டு. அரச விடுமுறை தினங்களில் வேலைசெய்வது தொடர்பா கவும், அத்தினங்களுக்கரிய மேலதிக கொடுப்பனவுகள் தொடர்பாகவும் கூட்டு ஒப்பந்தங்கள் விரிவான விளக்கங்களைக் கொண்டிருக்கும்.

மேலும் மாதாந்தம்169 மணிநேர

www.padippakam.com

வேலை சட்டப்படியானதாகும். இது வாராந்தம் 39 மணிநேர வேலையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சில தொழில்களின் தேவைகருதி மாதாந்தம் 173 மணிநேர வேலையும் ஒப்பந்தத்தில் குறிக்கப்படுவதுண்டு. எனினும் மேலதிகக் கொடுப்பனவுகள் கூடிய நேரவேலைக்குக் கணக்கிடப்படல்வேண்டும். குடும்பத்தில் ஒருவருக்கத் திருமணம், அல்லது வேலையாளருக்குத் திருமணம், வீட்டில் குழந்தை பிறப்பு, பெற்றோர் அல்லது குடும்பத்தில் ஒருவர் இறப்பு ஆகியன தொடர்பாக சம்பளத்துடன் கூடிய விடுமுறைகள் அவர்களது சேவைக்கால அடிப்படையில் பெற்றுப்கொள்ள வசதிகள் சட்டப்படியும், கூட்டு ஒப்பந்தத்தின்படியும் உள்ளன. தொடர்ச்சியாக 5 மணிநேரம் வேலைசெய்யும் ஒருவருக்கு 15 நிமிட நேர ஓய்வும், எட்டு மணிநேரம் தொடர்ச்சியாக வேலைசெய்யின் 30 நிமிட நேர ஓய்வும் சட்டப்படியுண்டு.

எனினும் இவற்றையெல்லாம் உரித்தாக் கமுடியாத நிலையில் எத்தனையோ பேர் கஷ்டப்படுகிறோம். மேற்காட்டிய விடயங்கள் பற்றி அல்லது அவற்றையெல்லாம் தெரியாதவர்களாகி -சம்பளஉயர்வு பற்றி அல்லது ஏதாவது அடிப்படைஉரிமைகள்பற்றி பேசிவிட்டால் தொழில் கொள்வோர் எம்மீது எடுக்கும் நடவடிக்கைகள் மிகக் கடுமையானவையாகவே அமைகின்றன.

எனினும் இவற்றையெல்லாம் உரித்தாக் கமுடியாத நிலையில் எத்தனையோபேர் கஷ்டப்படுகிறோம். சம்பள உயர்வு பற்றியோ அல்லது ஏதாவது அடிப்படை உரிமைகள் பற்றியோ பேசிவிட்டால் தொழில் கொள்வோர் எம்மீது எடுக்கும் நடவடிக்கைகள் மிகக் கடுமையானவையாகவே அமைகின்றன.

எனவே ஆரம்பத்திலேயே எமது உரிமைகள் எவை என்பது பற்றித் தெரிந்துகொள்வதும் அவை மறுக்கப்படும்போது பணியாளர் பிரதிநிதிகள் -தொழில் தருனர் மாதாந்த கூட்டத்தில் இவ்விடயங்கள் பற்றிப்பேசி ஒரு தீர்வுக்கு வருவது எம்மை நாம் இழப்பிலிருந்து தடுக்கும் ஆரம்ப வழிமுறையாகும். அங்கும் அடுத்தடுத்து நிராகரிக்கப்பட்டால் அது தொடர்பாக உடன் தொழில் பரிசோதகர்களுக்கு (INSPECTION DU TRAVAIL) அறியத்தர வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக எம்மை தொழிற்சங்க அமைப்பொன்றில் இணைத்துக்கொண்டு வேண்டிய வழிகாட்டுதலைப் பெறுவது இலகுவானது.

நன்றி - ஓசை

அறிவைத் தன்னை அழிக்கும் சிறந்த ஆயுதமாகப் பயன்படுத்துகிறது மானிடம்.

- NIETZCHE

நியாயம் தங்கெளுக்கெதிராக உள்ளபோது மனிதர்கள் நியாயத்திற்கெதிராக உள்ளார்கள்.

- HELVETUS



படிப்பகம்

www.padippakam.com

# புள்ளி அடிப்படையிலான சாரதி அனுமதிப்பத்திரம்

சில நாடுகளில் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும், புள்ளி அடிப்படையிலான வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரமானது, பிரான்சிலும் இப்புள்ளி அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளதை சாரதிகள் அறியாமலிருப்பதற்கில்லை. முதன்முதலில் 1989ம் ஆண்டு யூலை மாதச் சட்டத்தினால் அடிகோலப்பட்ட, திட்டமிடப்பட்ட இப்புள்ளி வழங்கல் முறையானது மூன்று வருடங்களின் பின்னர், 1992 யூலை முதற்பகுதியிலிருந்து தனது நிபந்தனைகளை வரையறை செய்து நடைமுறைக்கு வந்துள்ளது. இப்புள்ளி வழங்கல் முறையானது சாரதிகளுக்குப் பொறுப்புணர்ச்சியூட்டுவதற்கும், வீதியொழுங்குகள் பற்றிய அவர்களின் கடைப்பிடிப்பை அதிகரிப்பதற்கும், தொடர்ச்சியான முறையில் தவறுகளை இழைக்கும் சாரதிகளிடமிருந்து ஓட்டுநர் உரிமையை மீளப்பெறுவதற்குமான நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இப்புள்ளி வழங்கல் முறையானது தவறுகளை அனுமதிக்கும் அதேவேளையில் தவறுகளின் காரணமாக ஏற்படும் விளைவுகளையும், அதன் பலனாக சாரதி எதிர்கொள்ளும் தண்டனைகளையும் வலியுறுத்துவதாகவும், தொடர்ச்சியான தவறுகளை இழைக்கும், தங்களையும் ஆபத்தில் ஈடுபடுத்தி, மற்றவர்களையும் ஆபத்தில் ஈடுபடுத்தும் பொறுப்பற்ற சாரதிகளினால் வீதியில் அபாயநிலை உருவாதலையும் கொடூர விபத்துக்களைத் தவிர்த்தலுமே இதன் முதன்மையான நோக்கமாகும்.

இவ்வகையில், சாரதி அனுமதிப்பத்திரம் வைத்துள்ள ஒவ்வொருவரும் பன்னிரண்டு புள்ளிகளுக்கு உரித்ததுடையவர் ஆகிகிறார். ஒருவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் எவ்வளவு பழமை வாய்ந்ததெனினும், எவ்வகையைச் சார்ந்ததெனினும் மொத்தமாக வழங்கப்படும் புள்ளிகள் பன்னிரண்டேயாகும்.

உள்நாட்டு அமைச்சின்கீழ் இயங்கும் SN-PC (System National du Permis de Conduire) எனப்படும் அமைப்பானது ஒவ்வொரு சாரதியின் பெயரிலும் ஒவ்வொரு கணனிப் பதிவைத் (fichier informatique) தயார் செய்துள்ளது. அதாவது வழங்கப்பட்ட ஒவ்வொரு சாரதி அனுமதிப்பத்திரும் ஒவ்வொரு கணணிப் பதிவைக் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் ஒவ்வொரு சாரதியின் பெயரிலும் 12 புள்ளிகள் வைப்பிலிடப்படும். இழக்கப்படும் புள்ளிகள் அவ்வப்போது கழிக்கப்படும். இறுதியான ஒரு புள்ளி எஞ்சியுள்ள வரையிலும் சாரதி அனுமதிப்பத்ரம் செல்லுபடியானதாகும்.

வைப்பிலிடப்பட்ட புள்ளிகளின் எண்ணிக்கையில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றமும் உள்நாட்டு அமைச்சின் கடிதம் ஒன்றினால் சம்பந்தப்பட்ட சாரதிக்கு அறிவிக்கப்படும். இக்கடிதமானது இழக்கப்பட்ட அல்லது மீளப்பெறப்பட்ட புள்ளிகளின் எண்ணிக்கையை மட்டுமே குறிப்பிடும். மீதியுள்ள புள்ளிகளின் எண்ணிக்கை இதில் குறிப்பிடப்படாதிருக்கும். தனது புள்ளிகளின் இருப்பு நிலை சம்பந்தமான கணணிப்பதிவுக் கொப்பியை சாரதி பெறமுடியாது. எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட சாரதியை தொழிலுக்கு அமர்த்தும் முதலாளியோ அன்றி அவரது வாகனத்தைக் காப்புறுதி செய்யும் நிறுவனமோ



படிப்பகம்

www.padippakam.com

(Assurance) இவ்வாறான கணணிக் கொப்பியைப் பெற்று இவரது புள்ளியிருப்பு விபரங்களை அறியாமலிருப்பதற்காகவே இந்நிபந்தனை வரையறுக்கப்பட்டுள்ளன.

நீதித்துறை, காவற்துறை, சாரதி அனுமதிப்பத்திரம் சம்பந்தமான நிர்வாகத்துறை தவிர, சம்பந்தப்பட்ட சாரதி மட்டுமே அவரது புள்ளியிருப்பு விபரங்களை Prefecture க்குச் சென்று அறியமுடியும்.
இழைக்கப்படும் தவறானது சாரதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அல்லது நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு, அவசியமெனச் சாரதி கருதும் பட்டசத்தில் மேன்முறையீடும் உறுதி செய்த பின்னரே புள்ளிகளின் இழப்பு உறுதி செய்யப்படும்.
புள்ளி வழங்கல் அடிப்படையானது, ஏற்கனவே வீதியொழுங்கு சம்பந்தமாக உள்ள விதிகளுடன் மேலிணைப்புச் செய்யப்படுகின்றது. ஆகையால் ஏற்கனவேயுள்ள குற்றவிதிமுறைகள் நடைமுறையிலேயே உள்ளன என்பதையும் சாரதிகள் நினைவு கூறல் வேண்டும்.
மற்றைய, வீதி உபயோகம் செய்வோரின் வாழ்க்கைக்கு ஆபத்து ஏற்படும் வகையிலான குற்றமிழைக்கும் சாரதிகளிடமிருந்து புள்ளிகள் பறிமுதல் செய்யப்படும். தவறுதலான இடத்தில் வாகனத்தைத் தரித்தல் அல்லது முன்னிருக்கையில் பாதுகாப்புப் பட்டிபோடாதிருத்தல் போன்ற இன்னோரன்ன தவறுகளுக்குப் புள்ளிகள் பறிமுதல் செய்யப்படமாட்டா.
வீதியொழுங்குமுறை மீறல்கள் அல்லது குற்றங்களுக்கேற்ற வகையில் இழக்கப்படும் புள்ளிகளின் எண்ணிக்கை மாறுபாடடையும்.

அ) ஒரு புள்ளி இழப்பை அளிக்கும் குற்றங்கள்.

■ அனுமதிக்கப்பட்ட வேகத்திலும், 20 Km/h க்கு உட்பட, அதிக வேகத்துடன் வாகனம் ஓட்டுதல்.

■ எதிரில் வரும் சாரதிக்கு இடையூறு உண்டுபண்ணும் வகையில் அவரது ஒளிச் சமிக்கை வேண்டுதலையும் மீறி பிரதான விளக்குகளை (feux de route) எரியவிடல்.

■ தொடர்ச்சியான கோட்டின் மேல் வாகனம் ஓடுதல்.

ஆ) இரண்டு புள்ளிகள் இழப்பை அளிக்கும் குற்றங்கள்.

■ அனுமதிக்கப்பட்ட வேகத்திலும் 20 Km/h க்கும் 30 Km/h க்குமிடைப்பட்ட, அதிக வேகத்துடன் வாகனமோட்டுதல்.

■ இன்னொரு வாகனம் தனது வாகனத்தைத் தாண்ட முற்படுகையில் தனது வாகனத்தின் வேகத்தை அதிகரித்தல்.

■ நெடுஞ்சாலைகளில் (Auto route) அதனை இரண்டாகப் பிரிவுபடுத்த அமைக்கப்பட்டுள்ள பகுதியில் (Pe terre - plein central) வாகனத்தை நிறுத்துதல் அல்லது ஓட்டுதல்.

இ) மூன்று புள்ளிகள் இழப்பை அளிக்கும் குற்றங்கள்.

■ தெருவின் இடப்பக்கத்தில் நியாயமான காரணமின்றி வாகனம் ஓட்டுதல்.

■ தனது வாகனத்தின் பக்கத்தில், தெருவில், இடைவிட்ட கோடுகளால், அண்மிக்காத தொடர்ச்சியான கோட்டைத் தாண்டுதல்.

■ மற்றைய சாரதிகளுக்கு எச்சரிக்கை செய்யாமலும், தனது திருப்பம் ஆபத்தற்றது என்பதை உறுதிசெய்யாமலும், அலட்சியமான முறையில் முக்கிய திருப்பங்களை வீதியில் செய்தல்.

■ அனுமதிக்கப்பட்ட வேகத்திலும், 30 Km/h க்கும் 40 Km/h க்குமிடைப்பட்ட, அதிகவேகத்துடன் வாகனமோட்டுதல்.

■ ஒருவருட காலத்திற்குக் குறைவான காலமாகச் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றவர்கள் அனுமதிக்கப்பட்ட வேகத்திலும், 40 Km/h க்குக் குறைவான அதி வேகத்துடன் வாகனமோட்டுதல்.


படிப்பகம்

www.padippakam.com

■ விபத்து ஏற்படும் வகையில் இன்னொரு வாகனத்தைத் தாண்டிச் செய்லலல்.

■ ஆபத்தான வகையிலான, தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக வாகனத்தை நிறுத்துதல்.

■ இரவிலோ அல்லது மந்தாரமான நேரங்களிலோ, ஒளிச்சமிக்ஞையற்ற வாகனத்தை ஒளியூட்டப்படாத தெருவில் நிறுத்தி வைத்தல்.

■ அவசர நிறுத்தத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தெருவின் பகுதியில் வாகனத்தை நிறுத்துதல்.

ஈ) நான்கு புள்ளிகள் இழப்பை அளிக்கும் குற்றங்கள்

■ மூன்றுமாத காலத்திற்குட்பட்ட காலத்திற்குத் தொழிலாற்றும் தன்மை இழக்கும் வகையில் தற்செயலாக ஒருவரைக் காயமுறுத்தல்.

■ முன்னுரிமை விதிகளை வீதியில் கடைப்பிடிக்க மறுத்தல்.

STOP என்ற அறிவிப்பில் அல்லது சிவப்புச் சமிக்ஞையில் கட்டாய நிறுத்தம் செய்யாமை.

■ அனுமதிக்கப்பட்ட வேகத்திலும் 40 Km/h அல்லது அதற்கு மேலும் அதிகமான வேகத்துடன் வாகனமோட்டுதல்.

■ இரவிலோ அல்லது மந்தாரமான நேரங்களிலோ வெளிச்சமற்ற வீதியில், வெளிச்சமோ ஒளிச்சமிக்ஞையோ அற்ற வாகனத்தை ஓட்டுதல்.

■ நெடுஞ்சாலையில் (Auto route) பின் நோக்கி வாகனம் ஓட்டுதல் அல்லது இடைவழியில் திருப்புதல்.

■ ஒருவழிப்பதையின் தடைசெய்யப்பட்ட எதிர்த்திசையில் வாகனம் ஓட்டுதல்.

உ) ஆறு புள்ளிகள் இழப்பை அளிக்கும் குற்றங்கள்.

■ கொலையுண்டுபண்ணல் அல்லது மூன்றுமாதகாலத்துக்கு மேற்பட்ட காலத்திற்கு ஒருவரின் தொழிலாற்றும் தன்மை இழக்கும் வகையில் தற்செயலாக ஒருவரைக் காயமுறுத்தல்.

■ குடிபோதையில் வாகனமோட்டுதல்.

■ குடிபோதைப் பரிசோதனைக்கு உட்பட மறுத்தல்.

■ விபத்தின் பின் தப்பியோடுதல்.

■ வாகனத்தை நிறுத்த மறுத்தல். சோதனைக்கு வாகனத்தை உட்படுத்த மறுத்தல்.

■ வாகனப் போக்குவரத்திற்குத் தடை செய்தல்.

■ போலியான இலக்கத்தகடு உபயோகித்தல். வாகனத்தில் இலக்கத்தகடு இல்லாமலிருத்தல். வாகனம் பற்றிய பொய்யான தகவல் கூறல்.

■ சாரதி அனுமதிப்பத்திர இடைநிறுத்தக் காலத்தின்போது வாகனமோட்டுதல்.

இழக்கப்பட்ட புள்ளிகள் நிரந்தரமாகவே இழக்கப்பட்டவையல்ல. இறுதியான ஒரு புள்ளியுள்ளவரையிலும் இழக்கப்பட்ட புள்ளிகளை மீளப் பெறுவதற்கான வழிகள் உண்டு. சாரதி தனது புள்ளிகளை நிர்வாகம் செய்யும் தன்மையைப் பொறுத்து மீளப்பெறுதல் விரைவடையலாம் அல்லது தாமதமாகலாம்.

ஒரு சாரதி தனது இறுதிப்புள்ளியை இழக்காது மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக ஓடினால் மூன்று வருட முடிவில் வழமை போன்று பன்னிரண்டு புள்ளிகளும் அவருக்கு மீள வழங்கப்படும். தனது 11வது புள்ளியை இழந்த நாளிலிருந்து இம் மூன்று வருடங்கள் கணிக்கப்படும். குற்றப்பணக் கட்டணத்துடன் உள்ளாகிய ஒவ்வொரு புள்ளி இழப்பும் அதன் பத்தாவது வருடமுடிவில் (மூன்று வருடமுடிவில் மீண்டும் முழுவதும் பெறாத பட்சத்தில்) மீளவழங்கப்படும்.

இது தவிர சாரதி ஒரு பிரத்தியேகப் பயிற்சிவகுப்பொன்றில் (Stage de Sensibilisation) பங்குபற்றுவதன்மூலம் மிக



படிப்பகம்

www.padippakam.com

விரைவில் தனது புள்ளிகளை மீளப்பெற லாம். 16 மணித்தியாலங்கள் அல்லது இரண்டு நாட்கள் மட்டுமே பங்கு கொள் ளவேண்டிய இவ்வகுப்புக்களின் மூலம் ஒருவர் நான்கு புள்ளிகளை மீளப்பெற லாம். இவ்வகுப்புக்களின் செலவாக, பங்குகொள்ளும் சாரதி 1200க்கும் 1500க் கும் இடைப்பட்ட தொகையினைச் செலுத் தவேண்டும். இதுமட்டுமன்றி இவ்வா றான வகுப்பில் இரண்டு வருடத்திற் கொருமுறையே ஒரு சாரதி பங்குகொள் ளலாம். எவ்வாறெனினும் மொத்தப்புள் ளிகளின் எண்ணிக்கை 11 ஐத் தாண்ட முடியாது. இவ்வழியில் ஐந்து புள்ளிகளை இழந்த பின்னரே சாரதி இவ்வாறான வகுப்பில் பங்கு கொள்வது உகந்தது.

அனைத்துப்புள்ளிகளையும் இழந்த சாரதி அனுமதிப்பத்திரம் எவ்வித வலுவும் அற் றது. எல்லாப்புள்ளிகளையும் இழந்த சாரதிக்கு Prefecture பதிவுத்தபால் மூலம் இதனை அறிவிக்கக் கடமைப்பட்டுள் ளது. இக்கடிதம் கிடைக்கப்பெற்ற நாளி லிருந்து ஒருவார காலத்திற்குள் சம்பந்தப் பட்ட சாரதி தனது சாரதி அனுமதிப்பத் திரத்தை Prefecture ல் ஒப்படைக்கவேண் டும்.

புள்ளிகள் எல்லாவற்றையும் இழந்த செல் லுபடியாகாத சாரதி அனுமதிப்பத்திரத்து டன் வாகனம் ஓட்டுதல் மிகவும் தண்ட னைக்குரிய குற்றமாகும். முற்று முழுவ தாக புள்ளிகளை இழந்து, தனது சாரதி அனுமதிப்பத்திரத்தை இழந்த ஒருவர் அதை மீண்டும் பெற்றுக்கொள்ள புதிய பரீட்சைகட்கு உட்படுத்தப்படுவார். பரீட் சைகளின் தன்மைகள் பற்றிய விபரங்கள் இன்னமும் தயார் நிலையிலேயே உள் ளன. நடைமுறைக்கு வெகுவிரைவில் கொண்டுவரப்படும்.

எது எவ்வாறெனினும் சாரதி அனுமதிப்பத் திரத்தை இழந்த ஒருவர் அதை மீண்டும் பெறுவதற்கு ஆகக் குறைந்தது ஆறுமாதங் கள் பொறுத்திருக்க வேண்டும். சாரதி அனுமதிப்பத்திரத்தை இழந்த ஒருவர் அதை மீண்டும் பெறுவற்காக பரீட்சைக்கு பதிவு செய்யுமுன்னர் உளவியல், சுகாதா ரப்பரீட்சைக்குத் தன்னையுட்படுத்தி மீண் டும் சாரதியாக வருவதற்கு தனக்கு தக மையுள்ளது என்பதை நிரூபிக்க வேண் டும். அவ்வகையில் மேற்படி நபர்:

அ) முதலில் தான் சார்ந்த Prefecture ல் சுகாதாரப் பரீட்சையொன்றிற்காக விண் ணப்பிக்க வேண்டும்.
ஆ) சுகாதாரப் பரீட்சையில் வாகனம் ஓட்டுவதற்கான உள, உடல் தகமையுள் ளதை உறுதிசெய்தபின்னர், சாரதி அனு மதிப் பத்திரத்திற்காக விண்ணப்பம் செய் தல் வேண்டும்.
இ) இதன் பின்னர் சாரதி அனுமதிப்பத் திரத்திற்கான பரீட்சைகளில் (Auto Ecole ஒன்றினூடாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ) சித்தியடையவேண்டும்.

ஒரு பெண் - றோஜாச் செடியைப் போன்றவள்.
றோஜாப் பூவில் மணமும் உண்டு. முள்ளும் உண்டு.

நண்பனுக்கு நன்மை செய். அவனை இழவாதிருக்க;
பகைவனுக்கு நன்மை செய் அவனை நண்பனாக்க.

பொன்னை உரைப்பது கல்லில்;
நல்லாரை உரைப்பது நாவில்.


படிப்பகம்

www.padippakam.com


# கோல்டன் ஸ்டார்

# GOLDEN STAR

சிங்கப்பூர் உடைகள், சிறந்தரக சாறிகள், சேட்ஸ், ரவுசர்ஸ், ஜீன்ஸ், சேட்ஸ் பட்டு வேஸ்டிகள், பட்டுப் புடவைகள், பஞ்ஞாபி உடைகள் , கவுண்கள்

22 கரட் தங்க நகைகள், கைக்கடிகாரங்கள், மணிக்கூடுகள், எவர்சில்வர், பித்தளைப் பொருட்கள், கல்குலேட்டர்கள், றைஸ்குக்கர்கள் அலங்காரப் பொருட்கள், கவரிங் நகைகள் பாட்டு கசட்டுகள், கொம்பக்ற் டிஸ்குகள்

199, RUE DE FG. SAINT DENIS, 75010 PARIS
TEL: 42 09 26 50 - 42 07 26 44 FAX: 40 05 94 87
Mo: Gare du Nord - La Chapelle



# GEEVA SOUND & VIDEO SERVICE

பிறந்தநாள், திருமண வைபவங்களுக்கும் மேடை நிகழ்ச்சிகளுக்கும் உரிய முறையில் ஒலி அமைப்பையும், வீடியோ பிடிப்பையும் செய்பவர்கள்

# ஜீவா ஒலி ஒளி சேவை

எமது ஒலி அமைப்பில் Air Mike பயன்பாட்டிற்கு உண்டு

உங்கள் அனைத்துத் தொடர்புகட்கும்

G E E V A - 42 55 01 19 / 46 31 02 49




படிப்பகம்

www.padippakam.com


# குமார் சொப் S. A. R. L.

## எமது சேசையில் பல கிளைகள்

### KUMARS JEWELS

80, BLD. BARBES, 75018 PARIS - TEL: 42 59 35 00 - Mo: Marcdet Poissonniers

### SINGAPORE EXCHANGE

38, RUE DE ST. QUENTIN, 75010 PARIS - TEL: 48 74 48 21 Mo: Gare du Nord
1, RUE DES INNOCENTS, 75001 PARIS - TEL: 42 21 43 10
RER / METRO - CHATELT

### KUMARS TRAADE CENTER

193, RUE DE FG. SAINT DENIS, 75010 PARIS
Mo: Gare du Nord - La Chapelle



பாரிஸ் மாநகரில்
தரமான இறைச்சி வகைகளை வழங்கி
இல்லத்தரசிகளின் ஆதரவைப்பெற்ற
ஒரே ஒரு ஸ்தாபனம்

# யாழினி சென்ரர்

# YALINI Boucherie

2, Rue Perdonnet, 75010 Paris
Tel: 42 09 00 76

METRO: LA CHAPELLE ou GARE DU NORD




படிப்பகம்

www.padippakam.com

10 வருடகால அனுபவம் மிக்க

## சசி வீடியோ விஷன்
## லா சப்பலில்

ஓடியோ, வீடியோ, கொம்பக்ற் டிஸ்குகள் (C. D)
தொம்சன் ஓடியோ, வீடியோ பிரதிகள்
தமிழ் வார, மாத பத்திரிகைகள், சஞ்சிகைகள்
அனைத்திற்கும்

21, BD. DE LA CHAPELLE, 75010 PARIS
TEL: 42 09 18 88
Mo: La Chapelle (அருகாமையில்)

உங்கள் சேவையில்

## அமல் மொழி பெயர்ப்பு சேவை

(பிரெஞ்சு அரசு அங்கீகாரம் பெற்றது)

### தமிழ் - ஆங்கிலம் - சிங்களம்

ஆகிய மும்மொழிகளுக்குமான
பிரெஞ்சு மொழி பெயர்ப்புகள்

உரிய நேரத்தில், குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்

21, BD. DE LA CHAPELLE
75010 PARIS
TEL: 42 09 62 75
Mo: La Chapelle

27 (42), ALLE ARC EN CIEL
93150, LE BLANC MESNIL
TEL: 48 65 97 72



படிப்பகம்

www.padippakam.com

# விஞ்ஞானமும் மனிதனும்

வானத்தை வில்லாய் வளைத்துவிட் டேன் என்று தன்னைத்தானே வியந்து பார்த்துக் கொண்டிருக்கிறான் மனிதன். எந்த இயற்கையைக் கண்டு அஞ்சுகி னானோ இன்று அவற்றையெல்லாம் ஆய்வு செய்கிறான். நடனமாடும் சிவனின் தலையிலுள்ள சந்திரனில் நடனமாடுவது என்பதைச் சர்வசாதாரணமாக்கிவிட்ட நிலையில், ஒவ்வொருகணமும் அப்பால் நோக்கிப்பயணம் போய்க்கொண்டிருக்கி றான். நிஜமாவே வியத்தகும் சாதனை கள். விஞ்ஞானத்தின் சாதனைகளைப் பட்டியல் போட்டுப்பார்க்க முடியாதள வுக்கு அவற்றின் எண்ணிக்கை நாளுக்கு நாள் நீண்டுகொண்டே போகின்றது. மருத்துவத்துறையில் இறுதியாக அடைந் திருக்கும் முன்னேற்றம் மனிதகுலத்துக்கு பேரச்சுறுத்தலாகவும் தோன்றுகின்றது. உயிர்ஜீவ அணுக்களைப்பற்றிய ஆய்வும் அறிவும் திகைப்பூட்டும் விளைவுகளைத் தரவல்லனவாய் பரிணமித்துள்ளது. உயிர் ஜீவ அணுக்களை விரும்பிய வகையில் கையாள்வதன்மூலம், கருப்பையில் இருக் கம் மூன்றுநாட்கள் மட்டுமே வயதான ஜீவனின் அனைத்துத் தன்மையினையும் முன்கூட்டியே வேண்டியமாதிரித் திட்ட மிடுவது என்பது இலகுவான ஒன்றாகப் பட்டு விட்டது. மூளையைப்பற்றிய ஆய் வின் வெளிப்பாடுகள் தினமும் விஞ்ஞான உலகத்தை வியப்புச் சமுத்திரத்தில் ஆழ்த்திவிடுகின்றது.

எலக்ரோனிக் புரட்சியின் தொடர்ச்சி அனைத்து ஆய்வுத்துறைகளிலும் எதிரொலிக்கின்றது. தொலைத்தொடர்புச் சாதனங்களைப்பற்றிப் பேசவும் வேண் டாம். தட்டையா உருண்டையா என்று சில நூற்றாண்டுகளுக்குமுன் எந்தப் பூமி யின்மீது விவாதம் செய்தானோ , அதே பூமியை தேசிக்காயை மேசைமேல் வைத்து ஆய்வு செய்வதுபோல் ஆய்வு செய்துகொண்டிருக்கின்றான் மனிதன். ஒளிக்கற்றைகளுக்குள்ளே (Laser)செய்தி களைத் திணித்து கற்பனை வேகத்தில் பரிமாற்றம் செய்வதென்பது சாதாரண கணியமொன்றாக மாறிவிட்டது. கற்பனா வேகம் என்பது ஆமைவேகமாகிவிட்டது.

எத்துறையை எடுத்தாலும் தொழில்நுட் பத்தின் சாதனை தன்பிடிகளை உறு திசெய்கின்றது. யார் கண்டார்கள் புய லையும் பூகம்பத்தையும் முன்னறிவுப்புச் செய்யத்தெரிந்த மனிதன் ஒரு நாள் அவற் றைக்கையாளவும், அடக்கவும் தெரிந்து விடலாம். வானமண்டலத்தில் வலம் வந்துகொண்டிருக்கும் ' சற்றலைட் ' களின் எண்ணிக்கையும் அவற்றின் உப யோகமும் சொல்லிலடங்கா. உலகின் எந்த மூலையில் இருந்தும், இன்னொரு மூலையில் உள்ள மனிதனோடு நேரடி யாகப் பார்த்தவாறே சம்பாசனை செய்ய வதென்பது சர்வசாதாரணமாகிவிட்டது. கவிஞன் கண்ட கனவுகளை விஞ்ஞானி நனவாக்கிக் கொண்டிருக்கின்றான். கனவு கண்டவர்களின் கற்பனாபலம் மிகச்சிறி யவை என்றும் உறுதிப்படுத்திக் கொண் டிருக்கிறான்.

மனிதனின் கண்களைவிடப் பல்லாயிரம் மடங்கு பலமும் திறனும் கொண்ட பல ' ரெலஸ்கோப் 'புக்கள் பிரபஞ்சத் தைப்பார்த்து ஆய்வுசெய்த வண்ணமாய் உள்ளது. வளிமண்டலத்துக்கு அப்பால் தொலைவில் நின்று மிகமிகத்தொலைவை ஆய்வு செய்து கொண்டிருக்கும் மனித னின் செயற்கைக்கண்கள் (ரெலஸ்கோப்) பூமிக்கு அனுப்பிக்கொண்டிருக்கும் செய் திகளாவன நேற்றுவரை உண்மையென



படிப்பகம்

www.padippakam.com

எண்ணிக்கொண்டிருந்த எத்தனையோ விடயங்களைப் பொய்யென நிருபித்துவிட்டன. பால்வீதி நட்சத்திர மண்டலத்தின் கோடானுகோடி நட்சத்திரங்களில் மிகச் சிறிய நட்சத்திரமொன்றுதான் சூரியன். நாங்கள் கண்களால் பார்க்கக்கூடிய கோடானுகோடி நட்சத்திரங்கள் கற்பனாதூரங்களுக்கப்பால் உள்ளதால் மிளிருவதால் மட்டுமே அவற்றின் நிஜமான பரிமாணங்கள் எங்களுக்குத் தோன்றுவதில்லை. சூரியன் என்ற நட்சத்திரமோ பூமிக்கு மிகமிக அண்மையில் உள்ளதால் நமது கண்களுக்குப் பெரிதாகத் தோன்றுகின்றது. பிரபஞ்ச அமைப்புக்குள் நாம் வாழும் பூமி என்பது தூசிப்பரிமாணமுமற்றது. அவ்வூறென்றால் நாம்? எவ்வளவுக்கெவ்வளவு பிரபஞ்சம் பற்றிய மனிதனின் அறிவு வளர்ச்சியடைந்து கொண்டு செல்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு தனது அறிவு மிகச்சிறியது என்று மனிதன் உணர்ந்து கொண்டு செல்கிறான். பால்வீதி நட்சத்திரங்களையும் தாண்டி மனிதன் ஒருநாள் தன் ஏவுகணையை அனுப்பக்கூடும். அன்று பால்வீதி நட்சத்திரமென்பது இன்னொரு முழுமையின் மிகச் சிறிய அங்கமே என்று அறியவும் கூடும். அப்பாலுக்ப்பாலாச் சென்றுகொண்டிருக்கும் மனிதன் அறிவதெல்லாம் அப்பாலுக்கப்பாலும் ஏதோவுள்ளது என்பதையே !

இஃதொருபுறமிருக்க, 19ம் நூற்றாண்டின் முற்பகுதியிலே, ஒரு விஞ்ஞானி சடப்பொருட்களின் மிகமிகச் சிறிய துணிக்கையிதுதான் என்றும், அதை மேலும் கூறுபோட முடியாதென்றும் அணுவை வரையறுத்தான். பின்னால் வந்தவர்கள் அதை மேலும் ஆய்வு செய்தார்கள். பிரிபாடடையாத இறுதியான துணிக்கையிது என்று கூறிவிட்டுப்போனதை மேலும் பகுத்தார்கள். இலத்திரன்கள், புலோத்தன்கள், கரு என்றெல்லாம் துண்டமாடினார்கள். திருப்தியடையவில்லை. மேலும் பகுத்தார்கள். மேலும் பகுப்பார்கள். குளிர்காலத்தில் சேட்கொலரை இழுத்து ஐஸ்கட்டிகளைப் போட்டாற் போன்ற கண்டுபிடிப்புக்கள். உயிரினங்களும், பொருட்களும் எந்தச்சடப்பொருட்களால் ஆக்கப்பட்டுள்ளதோ, அச்சடப் பொருட்கள் ஆக்கப்பட்டுள்ள துணிக்கைகளின் பெரும்பகுதி வெறுமையாக உள்ளதாம்.

அணுக்களின் கட்டமைப்புக்கும் அண்டசராசரங்களின் கூட்டமைப்புக்கும் இடையில் வித்தியாசம் இல்லையென்பது மட்டுமல்ல, பிரபஞ்சம் முழுவதுமே ஒரு மிகச்சிறிய சக்திமிகுந்த துணிக்கையொன்றிலிருந்தே வெடித்துச்சிதறியதானென்றும், பிரபஞ்சமானது இன்னமும் விரிவடைந்த நிலையிலேயே உள்ளதென்றும் இறுதியான ஆய்வுகள் காட்டுகின்றன.

அண்டங்களைப்பற்றிய மனிதனின் ஆய்வு முடிவற்று நீண்டு கொண்டு செல்கிறது. எதையும் தெளிவாக மனிதன் தெரிந்து கொள்ளவில்லை. அணுக்களைப்பற்றிய ஆய்வுகளும் இவ்வாறாகத்தான் அமைகின்றது. விஞ்ஞானம் என்றால் என்ன ? நேற்றய உண்மைகளைப் பொய்யாக்கும், நாளைய உண்மைகளால் பொய்யாக்கப்படும், இன்றை உண்மைகளைத் தேடுவது.

அண்டத்தைத் தேடும் ஒருவன், அணுவிற்குள் தேடும் இன்னொருவன். இறுதியில் என்ன கண்டடைவார்கள் என்பதை, அடிமுடி தேடிப்போன கதைகூறி அறிவுறுத்தலாம்.

> அனைத்தும் கண்டு ஆச்சரியப்படுவனே அறிஞன்
> - GIDE



படிப்பகம்

www.padippakam.com


# கம்பியூட்டர் வகுப்புகள்

## சனி ஞாயிறு கிழமைகளில்



காலை 9.30 மணி - பி.ப. 12.00 மணி
பி.ப. 1.00 மணி - பி.ப 3.30 மணி
மாலை 5.00 மணி - மாலை 7.30 மணி

## 5 வாரகால வகுப்புகள்

திங்கள் - வெள்ளி
மாலை 4.00 மணி - மாலை 6.30 மணி

## 4 வாரகால வகுப்புகள்

உங்கள் எதிர்காலத்திற்கு தேவையான MS DOS வகுப்புகள் தற்போது நடைபெறுகின்றன.
விரைவில் Computer Programme வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளது.
பயிற்சி நேரத்தின் போது தனித்தனி கம்பியூட்டர் வழங்கப்படும்.

குறிப்பு: எம்மால் கம்பியூட்டர் திருத்திக் கொடுக்கப்படும்

அனைத்து தொடர்புகட்கும்

**Tel: 49 57 03 98**


படிப்பகம்

www.padippakam.com


# பிரெஞ்சு வகுப்புகள்

சனி ஞாயிறு கிழமைகளில்

பி.ப. 1.00 மணி - பி.ப. 2.30 மணி
பி.ப. 2.30 மணி - மாலை 4.00 மணி
மாலை 4.00 மணி - மாலை 5.30 மணி
மாலை 5.30 மணி - மாலை 7.00 மணி

## ஒவ்வொன்றும் 4 மாதகால வகுப்புகள்

மாத காலத்தில் பிரெஞ்சு மொழி - இலக்கணத்துடன் கூடிய அறிவைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## கம்பியூட்டர் வகுப்புகள்

## AUTO ECOLE க்கு
## தமிழ்மொழி மூலமான CODE வகுப்புகள்

உங்கள் அனைத்துத் தொடர்புகட்கும்
சனி ஞாயிறு கிழமைகளில்

CENTRE PAROSIEL DE NOTRE DAME DE BERCY
11, RUE DE LA NATIVITE
(1, RUE DE BERCY + 5, RUE DE DIJON சந்திக்கருகில்)
75012 PARIS

Mo: Bercy - Dugommier - Daumesnil

**Tel: 49 57 03 98**


படிப்பகம்

பாரதி பதிப்பகம் - 40 37 41 85